වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
Annual Performance Report

2021



රාජ්‍ය ආරක්ෂක, ස්වදේශ කටයුතු හා ආපදා කළමනාකරණ රාජ්‍ය අමාත්‍යාංශය
தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
State Ministry of National Security, Home Affairs and Disaster Management



வருடாந்த செயலாற்றுகை அறிக்கை 2021

2021 ஆம் ஆண்டிற்கான உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சினால் (ஒட்டுமொத்த நிதி அறிக்கை பக்கம் இலக்கம் 16-48) ஏற்பட்ட செலவினங்களை உள்ளடக்கும் செலவினத் தலைப்பு 409 உள்நாட்டலுவல்கள் பிரிவின் கீழ் இந்த அறிக்கையில் அடங்கும்.

முகவரி	:	“நில மெதுர”, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05
தொலைபேசி எண்	:	011 5924851
தொலைநகல்	:	011 2369971
இணைய தளம்	:	www.moha.gov.lk
மின்னஞ்சல்	:	info@moha.gov.lk



கௌரவ பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்களின் செய்தி

2020.11.20 முதல் 2021.02.16 வரை உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சகமாக செயல்பட்டு வந்த இந்த அமைச்சகம் 2021.02.16 ஆம் திகதியிலிருந்து உள்நாடலுவல்கள் இராஜாங்க அமைச்சகமாக பிரிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது இந்த அமைச்சுக்கள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் பிரதான பிரிவாக தொழிற்படுகின்றன.

புதிய அரசியலமைப்பு திருத்தங்கள், மாவட்ட மற்றும் ஆளுகை நிர்வாகத்தை செயற்றிறனாகவும் வினைத்திறனாகவும் நடைமுறைப்படுத்துவற்கான திட்டங்களை உருவாக்குவற்கான பிரதான பொறுப்பும் இந்த அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காக, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தலுடன், மனித வள திறனை அதிகரிப்பதுடன் தொழிநுட்ப வசதிகளையும் பெற்றுக்கொடுத்து கிராமிய மட்டம் வரையில் மிகச் சிறந்த முகாமைத்துவத்தை மேற்கொள்கிறது.

எவ்வாறாயினும், உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு என்ற முன்னாள் அமைச்சின் செயலாற்றுகை பற்றிய அறிக்கை இதுவாகும்.

இந்த செயல்திறன் அறிக்கையானது, உலகில் தற்போது நிலவும் கோவிட் தொற்றுநோய்க்கு ஏற்றவாறு மாற்றியமைத்து, அதை ஒரு நாடாக மாற்றியமைப்பதில் அப்போதைய இராஜாங்க அமைச்சகம் மேற்கொண்ட வளர்ச்சி முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

எமது அரசாங்கம் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்னரே, வெளிப்படையான மற்றசெயலூக்கமான பொது நிர்வாக கட்டமைப்பைக் கொண்ட அரசு வேண்டும் என்பது மக்களின் கோரிக்கைகளும் அபிலாஷைகளும் ஆகும். அதற்கு 'அரச ஊழியரின்' பொறுப்பு மிகவும் முக்கியமானது. அதற்கமைய, பொறுப்புள்ள நாட்டை உருவாக்குவதற்காக இந்த அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட அரச ஊழியர்களின் பொறிமுறையில் செயலாற்றுகை ,பொறுப்பும் பொறுப்புக்கூறலும் கொண்ட செயலூக்கமான நிர்வாகத்தை கொண்ட நாட்டை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியமானது.

மேதகு ஜனாதிபதியின் "ஸ்ப்லெண்டர் ஒப் விஸ்டாஸ்" என்ற பத்து கட்டளைகளில் உள்ள சிறப்பம்சங்களில் ஒன்று ஊழல் இல்லாத அரசு என்பதில் கவனம் செலுத்துகிறது. அதன்படி, தமது அபிலாஷையை அடைய, இந்த அமைச்சின் செயற்திறனை பகுப்பாய்வு ரீதியாக நோக்கும் போது, குறித்த காலப்பகுதியில் அன்றைய அமைச்சினால் ஏற்பட்ட முன்னேற்றம் மக்களுக்கு கிடைத்த வெற்றி என்பதை மகிழ்ச்சியுடன் கூறுகின்றேன். எதிர்காலத்தில் தமது வாழ்வாதாரங்களை சரி செய்வதில் இலங்கை மக்கள் எதிர்கொள்ளும் சவால்களை நீக்கி வளமான நாட்டை கட்டியெழுப்ப உதவுவதற்கு இந்த அமைச்சு இந்த ஆண்டிலும், வரவிருக்கும் ஆண்டுகளிலும் தொடர்ந்து பெரும் முன்னேற்றங்களை மேற்கொள்ளும் என்பதை அனைவருக்கும் நினைவூட்ட விரும்புகிறோம்.

தினேஸ் குணவர்தென (பி.எம்.)

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

பாராளுமன்றத்தலைவர்

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அவர்களின் செய்தி



சிவில் நிர்வாகத்தின் மையமாக விளங்கும் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கும் மாவட்ட நிர்வாகம், பிரதேச நிர்வாகம் மற்றும் கிராம அலுவலர் நிர்வாகம் தொடர்பான சேவைகளுக்கு வசதிகளை ஏற்படுத்தல், ஒருங்கிணைத்தல், அபிவிருத்தி இலக்குகளை அடைதல், அபிவிருத்தியின் நன்மைகளை கிராமிய மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு நிரல் அமைச்சிற்கு உதவுதல் மற்றும் செயற்பாட்டுப் பங்களிப்பினை வழங்குவது என்பவற்றை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

இந்த அமைச்சு முழு அரச சேவையிலும் அடிமட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரையிலான ஒரு சிறந்த பொது பொறிமுறையைக் கொண்டுள்ளது. 25 நிர்வாக மாவட்டங்களிலும் 14,022 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 336 பிரதேச செயலகங்கள், 25 மாவட்ட செயலகங்களைக் கொண்ட வலைக்கட்டமைப்பிற்கு இந்த இராஜாங்க அமைச்சகம் தலைமை தாங்குகின்றது. அதன்படி, இந்த அமைச்சின் நோக்கத்திற்குள் குடிமகன் ஒருவனின் பிறப்பிலிருந்து இறப்பு வரையிலான அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் பூர்த்தி செய்துகொள்ள முடிகின்றது.

இராஜாங்க அமைச்சகத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் 2021 ஆம் ஆண்டில் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சில் அரச துறை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தும் பொருட்டு இப்பிரிவு ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கது. இந்த நோக்கங்களை அடைவதற்கு இந்த அமைச்சின் கீழுள்ள மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம சேவகர் அலுவலகங்கள் ஆகியவற்றின் மூலமாக கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து சம்பந்தப்பட்ட கள உத்தியோகத்தர்களினதும் தனித்துவமான மிகச் சிறந்த பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளதை நான் மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் நினைவு கூறுகின்றேன்.

மேன்மை தாங்கிய ஜனாதிபதியின் சிறப்பு மற்றும் செழிப்புக்கான தேசிய கொள்கை ஆவணத்தை (National Policy Document of Vistas of Prosperity and Splendor) உள்ளீர்த்து நமது அனுபவங்களின் அடிப்படையில், தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி இலக்குகளை அடைவதற்காக, மக்கள் சார்ந்த பொது சேவையை பராமரிப்பதில் உதவுவதே நமது பொறுப்பாகும்.

எம்.எம்.பி.கே.மாயாதுன்ன
செயலாளர்
பொது நிர்வாக ,உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை - 2021

உள்ளடக்கம்.....

செலவினத் தலைப்பு – 409

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு

1.நிறுவன சுயவிவரம்/ நிர்வாக சுருக்கம் 01

1.1. அறிமுகம் 01

1.2.நிறுவனத்தின் இலக்கு,நோக்கு,குறிக்கோள்கள் 02

1.3.முக்கிய செயற்பாடுகள் 03

1.3.1. நிர்வாகப் பிரிவு 03

1.3.2. அபிவிருத்திப் பிரிவு 03

1.3.3. நிதிப் பிரிவு 04

1.3.4. விசாரணைப் பிரிவு 04

1.3.5. உள்நாட்டலுவல்கள் பிரிவு 04

1.3.5.1. மாவட்ட நிர்வாகம் 04

1.3.5.2. பிரதேச நிர்வாகம் 05

1.3.5.3.கிராம உத்தியோகத்தர் நிர்வாகம் 05

1.3.6.உள்ளக கணக்காய்வு பிரிவு 05

1.3.7. பொறியியல் பிரிவு 06

1.3.8. திட்டமிடல் பிரிவு 06

1.3.9. பிராந்திய நிர்வாக மறுசீரமைப்புப் பிரிவு 06

1.4. நிறுவன விளக்கப்படம் 07

1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் / நிறுவனங்கள் 09

2.முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு 10

2.1 விசேட அடைவுகள் 10

2.1.1. நிர்வாகப்பிரிவு 10

2.1.2. நிதிப் பிரிவு 10

2.1.3. விசாரணைப் பிரிவு 11

2.1.4. உள்நாட்டலுவல்கள் பிரிவு 11

2.1.4.1. மாவட்ட நிர்வாகப் பிரிவு 11

2.1.4.2.கிராம உத்தியோகத்தர் நிர்வாகப்பிரிவு 11

2.1.5 பொறியியல் பிரிவு 11

2.1.6. திட்டமிடல் பிரிவு 12

2.1.7. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு 12

2.2. சவால்கள் 13

2.2.1. நிர்வாகப் பிரிவு 13

2.2.2. அபிவிருத்திப் பிரிவு 13

2.2.3. நிதிப் பிரிவு 13

2.2.4. விசாரணைப் பிரிவு 13

2.2.5. உள்நாட்டலுவல்கள் பிரிவு 13

2.2.5.1. மாவட்ட நிர்வாகப் பிரிவு 13

2.2.5.2. கிராம உத்தியோகத்தர் நிர்வாகப்பிரிவு 14

2.2.6. பொறியியல் பிரிவு 14

2.2.7. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு 14

2.3. எதிர்கால இலக்குகள் 15

2.3.1. நிர்வாகப்பிரிவு 15

2.3.2. அபிவிருத்திப் பிரிவு 15

2.3.3. நிதிப் பிரிவு 15

2.3.4. விசாரணைப் பிரிவு 16

2.3.5. உள்நாட்டலுவல்கள் பிரிவு 16
2.3.5.1. மாவட்ட நிர்வாகப் பிரிவு..... 16
2.3.5.2. பிரதேச நிர்வாகம்..... 16
2.3.5.3. கிராம உத்தியோகத்தர் நிர்வாகப்பிரிவு..... 16
2.3.6. திட்டமிடல் பிரிவு..... 16
2.3.7. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு 16

3. 31.12.2021 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான மொத்த நிதி அறிக்கை.....18
3.1. நிதிச்செயல்திறன் அறிக்கை 18
3.2. நிதி நிலமைக் கூற்று 19
3.3.காசுப்பாய்ச்சல் கூற்று 20
3.4. நிதி கூற்றுக்களின் குறிப்புகள் 21
3.5. வருமான சேகரிப்பு செயலாற்றுகை 49
3.6. ஒதுக்கீட்டுப்பயன்பாட்டின் செயலாற்றுகை..... 49
3.7. நி.பி 208 இன் பிரகாரம், இத் திணைக்களம் /மாவட்டசெயலகம்/ஏனைய அமைச்சுக்கள்/திணைக்களங்களின் முகவராக மாகாண சபைக்கான செலவினத்திற்கான ஒதுக்கீடு..... 49
3.8. நிதி சாராத சொத்துக்கள் அறிக்கையிடலின் செயலாற்றுகை..... 51
3.9. இறுதி கணக்காய்வு இவ்வருடாந்த செயலாற்றகை அறிக்கையின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது 51

4.செயலாற்றுகைக் குறிகாட்டிகள்.....41

5.நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான செயல்திறன் 55
5.1.நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகை..... 55
5.2. நிலையான அபிவிருத்தி இலக்குகளின் சாதனைகளும் சவால்களும் 60
5.2.1. சாதனைகள்..... 60
5.2.1.1. அபிவிருத்திப் பிரிவு 60
5.2.1.2. நிதிப் பிரிவு 60
5.2.1.3. விசாரணைப் பிரிவு 60
5.2.1.4.உள்நாட்டலுவல்கள் பிரிவு..... 60
5.2.1.4.1.மாவட்ட நிர்வாகப் பிரிவு..... 60
5.2.1.5. பொறியியல் பிரிவு 60
5.2.1.6. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு 60
5.2.2. இலக்குகளின் சவால்கள்..... 61
5.2.2.1. அபிவிருத்திப் பிரிவு 61
5.2.2.2.நிதிப்பிரிவு..... 61
5.2.2.3. விசாரணைப் பிரிவு 61
5.2.2.4. பொறியியல் பிரிவு 61
5.2.2.5. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு 61

6. மனித வளங்கள் சுயவிபரங்கள்.....63
6.1. ஆளனி முகாமைத்துவம் 63
6.2. நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனித வளப் பற்றாக்குறை மற்றும் மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம் 63
6.3.மனிதவள அபிவிருத்தி..... 68

7.இணக்க அறிக்கை 69

தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

முகாமைத்துவ பிரிவு

நிறுவன விளக்கப்படம் 76

1.நிறுவன ரீதியான தோற்றப்பாடு/ நடைமுறைப்படுத்தல் சுருக்கம் 77

1.1. அறிமுகம்..... 77

1.2. நிறுவனத்தின் நோக்கு,பணி,நோக்கங்கள் 78

1.3. பிரதான பணிகள் 79

1.4. நிறுவன விளக்கப்படம்..... 80

1.4.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு 80

1.4.2. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் 81

1.5. அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்கள்/ திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் / மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படும் பிரதேச செயலகங்கள் 82

1.6. அமைச்சு/ திணைக்களங்களின் கீழ் காணப்படும் நிதியங்கள் (அனர்த்த முகாமைத்துவப்பிரிவு) 82

1.7.வெளிநாட்டு நன்கொடைகள் கிடைக்கப்பெறும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்..... 82

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு,சிறப்பு வெற்றிகள்,சவால்கள் மற்றும் எதிர்கால நோக்கங்கள் 83

2.1.முன்னேற்றம்..... 83

2.1.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு 83

2.1.2.தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்..... 84

2.2. சவால்கள்..... 87

2.3. எதிர்காலத்திட்டங்கள்..... 87

2.3.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு 87

2.3.2. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்..... 87

4.செயலாற்றகை சுட்டி..... 89

4.1.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு 89

4.1.2. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்..... 89

5. நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதற்கான செயல்திறன் 90

5.1. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வதிலான செயலாற்றுகை 90

5.1.1. அடையாளம் காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை குறிப்பிடுக..... 90

5.1.2. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்..... 92

5.2. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலான வெற்றிகள் மற்றும் சவால்களை சுருக்கமாக குறிப்பிடுக..... 92

6. மனித வள தோற்றப்பாடு 93

6.1. ஊளிய எண்ணிக்கை முகாமைத்துவம்..... 93

6.1.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு 93

6.1.2. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்..... 93

6.2. முழு நிறுவனத்தின் செயலாற்றுகை மீது மனித வள மிகை அல்லது பற்றாக்குறைத் தாக்கம் செலுத்தியுள்ள விதம்..... 93

6.2.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு 93

6.2.2. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்..... 93

6.3. மனிதவள அபிவிருத்தி 93

7. இசைவாக்க அறிக்கை..... 94

7.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு..... 94

7.2. தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் 99

அரச பாதுகாப்பு பிரிவு

1. நிறுவன தோற்றப்பாடு / நடைமுறைப்படுத்தலின் சுருக்கம். 104
1.1. அறிமுகம் 104
1.2. நிவனத்தின் பணி, நோக்கு 104
1.3. பிரதான பணிகள் 106
1.3.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 106
1.3.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 106
1.3.3. இரசாயன ஆயுத உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய அதிகார சபை 106
1.3.4. இலங்கை தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவனம் 107
1.4. நிறுவன விளக்கப்படம் 108
1.4.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 108
1.4.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 109
1.4.3. இரசாயன ஆயுத உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய அதிகார சபை 110
1.5. தேசிய பாதுகாப்பு பிரிவின் காணப்படும் பிரிவுகள் 111

2.முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு 112
2.1. விசேட வெற்றிகள் 112
2.1.1. அரச பாதுகாப்பு பிரிவு 112
2.1.2. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 112
2.1.3. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 112
2.1.4. இரசாயன ஆயுத உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய அதிகார சபை 113
2.1.5. இலங்கை தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவனம் 113
2.2. சவால்கள் 114
2.2.1. அரச பாதுகாப்பு பிரிவு 114
2.2.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 114
2.2.3 இரசாயன ஆயுத உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய அதிகார சபை 114
2.3.எதிர்கால இலக்குகள் 115
2.3.1. அரச பாதுகாப்பு பிரிவு 115
2.3.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 115
2.3.3. இரசாயன ஆயுத உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய அதிகார சபை 115

4. செயலாற்றகை சுட்டி 116
4.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 116
4.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 117
4.3. இலங்கை தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவனம் 117

5.நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்களை நிறைவேற்றுவதிலான செயலாற்றுகை (SDG) 118
5.1. அடையாளம் காணப்பட்டுள்ள உரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை குறிப்பிடுக 118
5.1.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 118
5.1.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 119
5.1.3. இலங்கை தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவனம் 119
5.2. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலான வெற்றிகள் மற்றும் சவால்களை சுருக்கமாக விபரிக்க 119

5.2.1.சாதனைகள் 119
5.2.1.1. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 119
5.2.1.2. இலங்கை தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவனம் 119
5.2.2. சவால்கள் 119
5.2.2.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 119
5.2.2.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 120

6. மனித வள தோற்றப்பாடு 121
6.1. ஊழியர் எண்ணிக்கை மீதான முகாமைத்துவம் 121
6.1.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 121
6.1.2. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 121
6.1.3. தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவனம் 121
6.2. நிறுவனத்தின் செயலாற்றுகை மீது பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம் 121
6.2.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 121
6.2.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 121
6.3. மனித வள அபிவிருத்தி 122
6.3.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 122
6.3.2. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 122
6.3.3. இலங்கை தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவனம் 122

7. இசைவாக்க அறிக்கை 123
7.1. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் 123
7.2. தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம் 127
7.3.இலங்கை தேசிய பாதுகாப்பு கல்வி நிறுவனம் 134

உள்ளக அலுவல்கள் பிரிவு

1. நிறுவனத்தின் தோற்றப்பாடு / செயற்படுவதன் பொழிப்பு 140
1.1. அறிமுகம் 140
1.2 நிவனத்தின் பணி,நோக்கு,நோக்கங்கள் 140
1.3. பிராதான பணி,செயற்பணி 140
1.4. நிறுவன ஒழுங்கமைப்பு 141
1.5. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள் 142

2. முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு,விசேட வெற்றிகள்,சவால்கள்,எதிர்கால இலக்குகள் 142
2.1. விசேட வெற்றிகள் 142
2.2. சவால்கள் 142
2.3. எதிர்கால இலக்குகள் 142

4. செயலாற்றுகைச் சட்டிகள் 143
4.1. நிறுவனத்தின் செயலாற்றுகைச் சட்டிகள் (செயற்திட்டத்தின் அடிப்படையில்) 143

5. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கான செயலாற்றுகை இனங்காணப்பட்ட ஏற்புடையதான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை குறிப்பிடுக 143
5.1.இனங்காணப்பட்ட ஏற்புடையதான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடுக 143
5.2. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக்கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்களை விரிவாக விபரிக்குக 144
5.2.1. வெற்றிகள் 144
5.2.2. சவால்கள் 144

6. மனித வள தோற்றப்பாடு 145

6.1.பதவியணி முகாமைத்துவம் 145
6.2.முழு நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியிருப்பது எவ்வாறு என்பதை சுருக்கமாக குறிப்பிடுக 145
6.3.மனி வள அபிவிருத்தி 145

7.இயைபு அறிக்கை 147

உள்நாட்டலுவல்கள்

இராஜாங்க அமைச்சு

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு

1. நிறுவன சுயவிவரம்/ நிர்வாக சுருக்கம்

1.1. அறிமுகம்

இந்த அமைச்சகம் உள் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சாகவும் செயல்பட்டது. நவம்பர் 20 திகதி 2020 வெளியிடப்பட்ட 2202/25 இலக்க அதிவிசேட வர்த்தகமானியின் அறிவிப்பின்படி தேசிய பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சாகவும் மாற்றப்பட்டது .2021 பெப்ரவரி 16 திகதி வெளியிடப்பட்ட 2215/20 இலக்க அதிவிசேட வர்த்தகமானியின் அறிவிப்பின்படி உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சக தற்போதைய பாதுகாப்பு அமைச்சரவையின் கீழ் செயல்பட்டுவருகின்றது.

கண்ணோட்டம்

அமைச்சின் தொடர்புடைய சேவைகளுக்கான சிவில் நிர்வாகம், வசதி மற்றும் ஒருங்கிணைப்புப்பணிகளின் மையமாக இருப்பதுடன், இது மாவட்ட நிர்வாகம், பிரதேச நிர்வாகம், கிராமிய நிர்வாக சிவில் பதிவு மற்றும் ஊழியர் நலன் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் உருவாக்கப்பட்ட பிரதான பிரிவுகள் ஆகும்.அரசாங்கத்தின் தேசிய முன்னுரிமைகளுக்கு இணங்க, சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு, அமைச்சு பொதுக் கொள்கைகளை அமுல்படுத்துதல், மனித வள முகாமைத்துவம், நிறுவன அபிவிருத்தி, இலத்திரனியல் மற்றும் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துதல் போன்ற பல துறைகளுடன் ஒத்துழைக்கிறது. ஒழுக்கமான சமுதாயத்தில் வளமான தேசத்தின் நோக்கத்திற்காக அனைத்து மற்றும் ஒவ்வொரு துறைகளையும் ஆதரித்து பங்களிப்பதன் மூலம் மற்றும் சிறந்த சேவையை வழங்குவதன் மூலமும் ஒரு உற்பத்தி குடிமகனின் குடும்பம் மகிழ்ச்சிக்கு ஏதுவாக அமையும்.

துணைப்பிரிவுகள்

- முக்கிய உள் பிரிவுகள்
  - நிர்வாகம்
  - அபிவிருத்தி
  - நிதி
  - விசாரணை
  - உள்ளக உள்நாட்டலுவல்கள் பிரிவு
  - உள்ளக கணக்காய்வு
  - பொறியியல்
  - திட்டமிடல்
  - பிராந்திய நிர்வாக மறுசீரமைப்பு
- அனைத்து மாவட்ட செயலகங்கள்
- பிரதேச செயலகங்கள்

1.2. நிறுவனத்தின் இலக்கு,நோக்கு,குறிக்கோள்கள்

இலக்கு



"தேசத்தின் அபிவிருத்திக்கான தனிச் சிறப்புடைய சேவையை வழங்குதல்"

நோக்கு



“பிராந்திய ஒருமைப்பாட்டுடன் பாதுகாப்பான மற்றும் இறையாண்மை கொண்ட அரசை உறுதிப்படுத்துவதற்கான மூலோபாய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.”

குறிக்கோள்கள்



- நாட்டில் மிகவும் உணர்வுபூர்வமான மற்றும் மக்கள் நட்புறவுடைய அரச சேவையை நிறுத்துவதற்கான அர்ப்பணிப்பு மற்றும் வேலைத்திட்டம்.
- நிறுவனங்களின் மனித மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறன்மிக்க வகையில் பயன்படுத்துவதன் மூலம் உற்பத்தித்திறனை மேம்படுத்தல்.
- தேசிய அமைச்சுக்களின் கீழ்மட்டச் செயற்பாடுகளுக்கு வலுவான பங்களிப்பைச் செய்வது.(கிராமிய/பிரதேச/மாவட்ட மட்டத்திலானது).
- உள்ளூர் சமூகபொருளாதார உட்கட்மைப்பில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.
- சர்வதேச நியமங்கள் மற்றும் தரங்களுக்கமைய இலங்கையின் அடையாளத்தையும் தேசிய பாதுகாப்பையும் உறுதிப்படுத்துகையில் இடப்பெயர் செயன்முறையினை வழிச்செலுத்துதல்.
- இலங்கைப் பிரஜைகளை பதிவு செய்து தேசிய ஆட்பதிவேட்டைத் தொகுத்து, தமது அடையாளத்தை ஸ்தாபிப்பதற்குத் தகுதியுள்ள நபர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை வழங்குதல் .

1.3. முக்கிய செயற்பாடுகள்

1.3.1. நிர்வாகப் பிரிவு

- மனிதவள முகாமைத்துவம்.
- அலுவலக முகாமைத்துவம்.
- அலுவலக முறையினை மேம்படுத்துவதற்கான உற்பத்தித்திறன் முகாமைத்துவம்.
- முகாமைத்துவ நடவடிக்கைகள் தொடர்பான கருவிகளின் பராமரிப்பு மற்றும் கட்டுப்பாடு.
- எளிதான பணிச்சூழலை உருவாக்குவதற்கு தர மற்றும் திறன் அடிப்படையில் புதுமையான தகவல் தொழில்நுட்ப முறையினை நடைமுறைப்படுத்துதல்.
- இராஜாங்க அமைச்சு மற்றும் அமைச்சின் கீழ் வழங்கப்படும் சேவைகள் பற்றிய தேவையான தகவல்களை எளிதாக பெற்றுக் கொள்ளும் வகைகளில் புதிய முறைகளை வழங்குதல்.
- திறன் மற்றும் உற்பத்தித்திறன் கொண்ட பணியாளர்களை உருவாக்குவதற்காக அதிகாரிகளுக்கு பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல்.
- தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொது மக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகளுக்கு மிகவும் வசதியாக தகவல்களைப் பெறுவதற்குத் தேவையான நடைமுறைகளைப் பராமரித்தல்.
- நிறுவனங்களுக்கு இடையேயான நட்புறவை பேணுவதற்கு தேவையான ஏற்பாடுகளை முறையான ஒருங்கிணைப்பு மூலம் செய்தல்.
- இராஜாங்க அமைச்சகத்தில் பெறப்படும் மக்களின் புகார்களிற்கு தீர்வு வழங்குவதற்கான நடைமுறைகளைப் பேணுதல்.
- அமைச்சகத்தின் கீழ் உள்ள சுற்றுலா விடுதிகள் தொடர்பான செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல், நிகழ்நிலை முன்பதிவு முறையைப் பராமரித்தல் மற்றும் சேவை பெறுபவர்களுக்கு எந்தவொரு இடையூறும் ஏற்படாதவகையில் சுற்றுலா விடுதிகளை முன்பதிவு செய்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை வழங்குதல்.
- அமைச்சின் நடவடிக்கைகளுக்குத் தேவையான செயல்பாட்டு போக்குவரத்து இருப்புக்களைப் பராமரித்தல்.
- அமைச்சின் அனைத்துப் பிரிவுகளுக்கும் மற்றும் அமைச்சின் எல்லைக்குட்பட்ட மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கும் தேவையான போதெல்லாம் சட்டப் பணிகளைச் செய்யக்கூடிய சட்டப் பிரிவு ஒன்றைப் பேணுதல்.

1.3.2. அபிவிருத்திப் பிரிவு

- கட்டிட நிர்மாணம் தொடர்பான பெறுகை முகாமைத்துவம்.
- வருடாந்த பெறுகைத் திட்டம் மற்றும் கட்டிட நிர்மாண தொடர்பான மூலதன செலவினங்களுக்கான செயற்பாட்டுத் திட்டம் மற்றும் குறித்த திட்டங்களின் அடிப்படையில் மாவட்ட செயலகங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் என்பன தயாரித்தல்.
- கட்டிட நிர்மான திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்கள் தொடர்பான பௌதீக மற்றும் நிதி முன்னேற்ற கண்காணிப்புகள் மற்றும் தேவையேற்படின் பொருத்தமான வழிகாட்டல்கள் வழங்கல்.
- மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களில் மூலதன சொத்துக்களின் புனருத்தாபனம் மற்றும் முன்னேற்றம் தொடர்பான வேலைகளுக்கான வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயரித்தல் மற்றும் கட்டிட நிர்மாணங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளின் தரத்தை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் ஒதுக்கப்படும் நிதியின் அதிகபட்ச மற்றும் வினைத்திறனான பாவனையை உறுதிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை கண்காணித்தல்.
- 200 மில்லியனுக்கும் மேற்பட்ட கிரயமுள்ள கட்டிட நிர்மாணங்களுக்கான உயர் தரத்திலான பெறுகை தொழில்பாடுகளை உரிய வேளையில் அமுல்படுத்தல்.
- அபிவிருத்திப் பிரிவு மற்றும் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களினால் நேரடியாக அமுல்படுத்தப்படும் அல்லது கையாளப்படும் நிர்மாண மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு அறிக்கைகள்,பெறுகைகள்அறிக்கைகள் மற்றும் ஏனைய தகவல்களை பொது திறைசேரி, நிதியமைச்சு, ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் தொடர்புடைய நிறுவனங்களுக்கு சமர்ப்பித்தல்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்கான நிர்மாண வேலைப்பாடுகளை இனங்காணல்
- மூலதனதிட்டங்கள் தொடர்பிலான பொது முதலீட்டுத்திட்டத்தினை அமுல்படுத்தல்.
- நில செவன திட்டத்தில் கட்டட நிர்மாண வேலைகளை அமுல்படுத்தல்.
- மாவட்ட மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்களில் உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தொடர்பான விடயங்களில் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- "பிபிதெமு பொலன்னறுவை" வேலைத்திட்டம் தொடர்பான திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

செய்தல் மற்றும் அதன் முன்னேற்றத்தை கண்காணித்தல்.

1.3.3. நிதிப் பிரிவு

- மாநில அமைச்சகம் மற்றும் கீழ் உள்ள நிறுவனங்களில் பொது நிதி மேலாண்மை மாநில அமைச்சகத்தின் எல்லை.
- கொள்முதல் மேலாண்மை
- நிதி நிர்வாகத்தில் நாவல் தொழில்நுட்ப முறைகளின் பயன்பாடு.
- சொத்து மேலாண்மை.
- நிதி மேலாண்மைக்கான பயிற்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள்.
- தணிக்கை தொடர்பான செயல்பாடுகளை ஒருங்கிணைத்தல்.
- நிதி மேலாண்மை தொடர்பான செயல்பாடுகளை கண்காணித்தல் மற்றும் பின்தொடர்தல்.

1.3.4. விசாரணைப் பிரிவு

- 2015 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை இந்த அமைச்சில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை ஆராய்ந்து, மேற்படி முறைப்பாடுகள் தொடர்பான 07 பிரிவுகள் இனங்காணப்பட்டு, அவ்வாறான குறைபாடுகள் ஏற்படுவதற்கான காரணங்களும், குறைபாடுகளைத் தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் கண்டறியப்பட்டுள்ளன.
- இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு படியாக, பிரதேச நிர்வாக அதிகாரிகள் (மாவட்ட செயலாளர்கள், பிரதி மாவட்ட செயலாளர்கள், அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட உதவி பிரதேச செயலாளர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் மேற்படி அலுவலகங்களின் நிர்வாக கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகங்களின் மற்றும் மாவட்ட செயலங்களின் கணக்காளர்கள்) மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக "சிறந்த சேவைக்கான வீதி வரைபடம்" என்ற தொடர் நிகழ்ச்சித்திட்டங்கள், நாடளாவிய ரீதியில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், இதுவரை அனுராதபுரம், திருகோணமலை, அம்பாந்தோட்டை, வவுனியா, மன்னார் மற்றும் நுவரெலியா ஆகிய 06 மாவட்டங்களில் 60 பிரதேச செயலகங்களை உள்ளடக்கியுள்ளது.
- மாவட்டங்களி 14ன் புலனாய்வுப் பிரிவுகளில் உள்ள அதிகாரிகளுக்கு ஆரம்பகட்ட விசாரணைகள், அறிக்கைகளைப் பதிவு செய்தல் மற்றும் பொதுச் சேவையில் முறையான ஒழுங்குமுறை நடைமுறைகள் குறித்து தொழில்முறை அனுபவத்துடன் கூடிய "விமசுமத அத்வெலக்" என்ற பயிற்சிப் பட்டறையை நடத்துதல்.
- பொதுமக்கள் முறைப்பாடுகளை முகாமை செய்தல்.
- கடிதங்கள்), தொலைபேசி அழைப்புகள் மற்றும் ஜனாதிபதி அலுவலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட முறைப்பாடுகள் மற்றும் தினசரி செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மற்றும் இணையம் மூலம் பெறப்படும் புகார்களை நிர்வகித்தல்
- அமைச்சின் கீழ் வரும் அனைத்து நிறுவனங்களினதும் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- வரைவு குற்றச்சாட்டுத்தாள் தயாரித்தல்.
- முறையான ஒழுக்காற்று விசாரணையின் போது சான்றுகளை சமர்ப்பித்தல்.
- முறையான ஒழுக்காற்று விசாரணைகளில் வழக்குத்தொடுத்தல்.
- ஆரம்ப விசாரணைகள் தேவைப்படாத முறையீடுகள் தொடர்பான உண்மைக் கோப்புகளைப் பராமரித்தல்.
- ஆரம்ப விசாரணைகளை நடாத்துதல்.
- மேல்மட்ட முகாமைத்துவத்தின் கவனத்திற்கு கொண்டு வருவதன் மூலம் ஒவ்வொரு நிறுவனத்திற்குமான ஆலோசனைகளை வழங்கல்.
- முறையீடுகளை அளிக்கும் தரப்பினருடன் தொடர்புடைய பொது அதிகாரிகளை அழைத்து முறையீடுகளில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் மற்றும் கூறப்பட்ட பிரச்சினைகளை விரைவாக தீர்க்க நடவடிக்கை எடுத்தல்.

1.3.5. உள்நாட்டலுவல்கள் பிரிவு

1.3.5.1. மாவட்ட நிர்வாகம்

- மாவட்ட செயலகங்களில் மனித வளங்கள் தொடர்பான மேற்பார்வை மற்றும் முகாமை செய்தல்.
- மாவட்ட செயலகங்களை முகாமை செய்தல்.
- மாவட்ட செயலகங்களிலுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.
- மாவட்டச் செயலாளர்களின் மாதாந்த மாநாடுகளை நடாத்தல்
- அரச விழாக்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை மற்றும் குடியரசின் நெறிமுறைகளை புதுப்பித்தல்.

- 1971 இலக்கம் 29 இன் விடுமுறைச் சட்டதின் படி போயா தினங்கள், அரச மற்றும் வங்கி விடுமுறைகள் தொடர்பான நடவடிக்கைகள்.
- தேசிய கொடி, தேசிய கீதம், தேசிய பாதுகாப்புத் தினம் ,ரணவிரு தினம் மற்றும் ஜனரஜ தினம் தொடர்பான நடவடிக்கைகள்.
- யாத்திரைக் கட்டளைச் சட்டத்திற்குரிய நடவடிக்கைகள்.
- வெடிபொருட்களை வெளியிடுவது தொடர்பான நடவடிக்கை.
- கிராமங்களின பெயர் மாற்றம் செய்தல்.
- பாராளுமன்ற ஆலோசனை செயற்குழு தொடர்பான நடவடிக்கை குறித்த விடயம் எழுதுநரின் பதிலைப் பெற்று இறுதிப் பதிலை அனுப்புதல் மற்றும் அது சம்பந்தப்பட்ட பொதுக் கோப்பினைப் பேணிச் செல்லல்(.
- பாராளுமன்ற வினாக்கள் தொடர்பான நடவடிக்கை (குறித்த விடயம் எழுதுநரின் பதிலைப் பெற்று இறுதிப் பதிலை அனுப்புதல் மற்றும் அது சம்பந்தப்பட்ட பொதுக் கோப்பினைப் பேணிச் செல்லல்).
- கிளைக்கு கிடைக்கப்பெறும் பொதுக் கடிதங்கள் தொடர்பான நடவடிக்கை -பல்வேறு நடவடிக்கைகள்)சனாதிபதி செயலகம் ,பிரதம மந்திரி அலுவலகம் ,அமைச்சின் ஊடாக , திணைக்களத்தின் ஊடாக ,பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் பல்வகை நபர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் கடிதங்கள்(.
- மாவட்ட செயலகங்களில் கட்டிடங்களை நிர்மாணித்தல் மற்றும் காணிகளை கையகப்படுத்தலுக்கு உரித்தாக கிடைக்கப்பெறும் பல்வகைக் கடிதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் .
- மாவட்ட செயலகங்களுக்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் பொருளாதார வாடகை தொடர்பான நடவடிக்கை மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் காணப்படும் மாவட்ட செயலகங்களின் அங்கீகரிக்கப்பட்ட சகல உத்தியோகத்தர்களினதும் தகவல்களை உள்ளடக்கிய தரவுத் தளத்தை இற்றைப்படுத்தல்.
- உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சகல அபிவிருத்தி உத்தியோகத்தர்களினதும் தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்களினதும் தகவல்களை உள்ளடக்கிய தரவுத் தளத்தை இற்றைப்படுத்தல்.
- மாவட்ட செயலகங்களில் பணியாட்தொகுதியினரின் வெற்றிடங்கள், மீளாய்வு அறிக்கை தொடர்பான நடவடிக்கை.
- "சனாதிபதிக்கு கூறுங்கள் சேவை "க்கு கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் பற்றிய விடயங்களில் கவனம் செலுத்தி தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- மாவட்ட நிர்வாகப் பிரிவின் தாபன நடவடிக்கைகளை நிறுவுதல்.

1.3.5.2. பிரதேச நிர்வாகம்

- பிரதேச செயலகங்களில் மனித வளங்கள் தொடர்பான மேற்பார்வை மற்றும் முகாமை செய்தல்.
- பிரதேச செயலகங்களில் பௌதீக வளங்கள் தொடர்பாக முகாமை செய்தல்.
- பிரதேச செயலகங்களிலுள்ள முரண்பாடுகளுக்கு தீர்வு காணுதல் .
- பிரதேச செயலக பிரிவுகளில் எல்லை நிர்ணயம் தொடர்பான செயற்பாடுகள்.
- பிரதேச விடயங்கள் தொடர்பாக ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.

1.3.5.3.கிராம உத்தியோகத்தர் நிர்வாகம்

- கிராம உத்தியோகத்தர்களது நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம்,ஓய்வூதியம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் போன்ற அனைத்து விடயங்கள் தொடர்பான மனித வள முகாமைத்துவம்.

1.3.6.உள்ளக கணக்காய்வு பிரிவு

- வருடாந்த திட்டத்திற்கு அமைவாக உள்ளக கணக்காய்வு நடைமுறைகளில் இடம்பெறும் குறைபாடுகள் மற்றும் தீர்வுகளை கலந்துரையாடல் ஊடாக வழங்கும் முறைமைகள் . முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல.DMA/01/2019 பந்தி இல.5.3 பரிந்துரைக்கு அமைய 04 தடவைகள் கூட்டங்களை நடாத்துதல்.
- முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை இல.DMA/01/2019 பந்தி இல.5.3 பரிந்துரைக்கு அமைவாக மாவட்ட செயலக காரியாலயங்கள் 25 உட்பட காலாண்டுக்கு ஒருமுறை நடைபெறும் முகாமைத்துவ கூட்டங்கள் 100 ற்கும் அமைச்சின் பிரதிநிதி ஒருவர் பங்குபற்றுதல்.
- மாவட்ட செயலங்கள் மற்றும் அமைச்சின் ஒவ்வொரு பிரிவிற்கும் நிதி கணக்காய்வு,செயல்திறன் கணக்காய்வு ,பண மதிப்பு கணக்காய்வு, செயல்பாட்டு கணக்காய்வு இவ் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்குதல்.
- 25 மாவட்ட செயலங்களில் உள்ள பிரதான கணக்காய்வாளரினால் அறிக்கைகளை

கண்காணிப்பதன் ஊடாக அமைச்சின் நிதி கட்டுப்பாட்டை உறுதி செய்தல்.

- மாவட்ட செயலங்களின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் காலாண்டு அறிக்கைகளுக்கு அமைவாக அமைச்சின் பிரதான கணக்காய்வாளர் அறிக்கை தயாரித்து திறைசேரிக்கு சமர்ப்பித்தல்.

1.3.7. பொறியியல் பிரிவு

- இராஜாங்க அமைச்சினால் அமுல்படுத்தப்படும் கட்டிட நிர்மாண திட்டங்களை மேற்பார்வையிடவும் ஆலோசனை வழங்கவும் நிறுவனங்களை ஒருங்கிணைத்தல்.
- மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலக கட்டிடங்களை நிர்மாணித்தல் அந்த - திட்டங்களுக்கான ஆலோசனை நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல் மற்றும் திட்டங்கள் தொடர்பான வடிவமைப்புகள், மதிப்பீடுகள், விவரக்குறிப்புகள் மற்றும் மாறுபாடு அறிக்கைகள் போன்ற ஆவணங்களை பரிந்துரை செய்தல் மற்றும் அங்கீகரித்தல்.
- மாவட்ட செயலக பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களின் தொழில்முறை கடமைகளை மேற்பார்வை செய்தல்.
- மாவட்ட செயலக பொறியியலாளர்களின் பதவி உயர்வுகள் மற்றும் பட்டயங்கள் மற்றும் தொழில்நுட்ப ஊழியர்களின் பயிற்சி தேவைகள் பற்றிய ஆலோசனை வழங்குதல்.
- சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு, வடிவமைப்புகள், விவரக்குறிப்புகள் மற்றும் மதிப்பீடுகளைப் பரிந்துரைத்தல் மற்றும் கட்டுமானத் திட்டங்களைச் செயல்படுத்துதல் மற்றும் உள்துறைப் பிரிவைச் சேர்ந்த அனைத்து சுற்றுலா விடுதிகளின் பராமரிப்பு பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல்.
- அமைச்சு பெறுகை குழுவின் பௌதீக மற்றும் நிதி தொடர்பான சிபாரிசுகள் வழங்கல்.
- "நில மெதுர" கட்டிடத்தின், பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல்.


1.3.8. திட்டமிடல் பிரிவு

- அமைச்சகத்தின் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரித்தல்.
- வருடாந்த செயற்திட்டத்தின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.
- வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பித்தல்.
- மாவட்ட மட்டத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்ற செயலாற்றுகை அறிக்கையின் அவசியமான நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- தேசிய மட்டத்திலும் மாவட்ட மட்டத்திலும் அந்தந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்களை அறிக்கையிடல் மற்றும் மீளாய்வு செய்தல்.
- அமைச்சின் முன்னேற்ற அறிக்கையைத் தயாரித்தல் மற்றும் வரவு செலவுத் திட்ட உரைக்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- தகவல் தொகுப்பு தயாரித்தல் மற்றும் தேசிய மட்டத்தில் உரிய நேரத்தில் பெறுமதியான தகவல்களுக்கு காட்சிப்படுத்தப்பட்ட செயற்பாட்டு அறையொன்றை ஏற்பாடு செய்தல்.
- மாவட்ட மட்டத்தில் கருத்தாக்க ஆவணங்களின் மூலம் விசேட வெளியீடுகள் உள்ளடங்கலாக இனங்காணப்பட்ட கருத்திட்ட முன்மொழிவுகள்.

1.3.9. பிராந்திய நிர்வாக மறுசீரமைப்புப் பிரிவு

- இ-கிராம உத்தியோகத்தர் கடன் திட்டத்தை செயல்படுத்தல்.
- அடிப்படைத் தகவல்கள், செயல்முறைகள் மற்றும் வளங்களை ஒருங்கிணைப்பதற்கான விசேடமாக பிரதேச மற்றும் மாவட்ட நிர்வாகத்தின் செயல்பாட்டு ஆய்வு.
- குடிமக்கள் சார்ந்த பணிப்பாய்வு எளிமைப்படுத்துதல்கள் மற்றும் குடிமக்களின் சாசனங்களை மதிப்பாய்வு செய்தல்.
- மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் கிராம உத்தியோகத்தர் மட்டங்களில் வினைத்திறன் விருத்தி மற்றும் வினைத்திறன் மாற்றத்திற்கான உதவி.
- அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் பிரிவுகளை மேம்பட்ட சேவை வழங்கல், உள்ளக வள முகாமைத்துவத்திற்காக மாற்றியமைக்க அரச மற்றும் அரசு சாராத பங்குதாரர்களுடன் வினைத்திறனான ஒத்துழைப்பு.

1.4. நிறுவன விளக்கப்படம்



1.5. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் / நிறுவனங்கள்

உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு

(16 ஆம் திகதி மாசி மாதம் 2021 இல் இருந்து)

சகல மாவட்டச் செயலகங்களும் சகல பிரதேச செயலகங்களும்

2.முன்னேற்றம் மற்றும் எதிர்கால தொலைநோக்கு

2.1. விசேட அடைவுகள்

2.1.1. நிர்வாகப்பிரிவு

- இதுவரை பணியாட்தொகுதியினரின் தேவைப்பாட்டில் கவனிக்கத்தக்க அளவு பதவி எண்ணிக்கையை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரித்துக் கொள்வதற்கு முடியுமாக உள்ளமை.
- அமைச்சின் அவசர அழைப்பிலக்கம் 1902 இன் ஊடாக அமைச்சுக்கு அனுப்பப்படும் பொதுமக்கள் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதனை துரிதப்படுத்தல்.
- அதிக எண்ணிக்கையான சுற்றுலா பங்களாக்களின் புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமாக இருந்தது.
- மேம்படுத்தப்பட்ட மென்பொருள் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக நாடு பூராகவும் உள்ள கிராம உத்தியோகத்தர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்குதல்.
- இணையவழி ஊடாக சுற்றுலா பங்களாக்களை ஒதுக்குவதற்கான வசதி வாய்ப்புக்களை பிரதேச செயலங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளல், முன்பதிவுகள் தொடர்பான தகவல்களை சேவை பெறுநர்களுக்கு தொலைபேசி குறுஞ் செய்தி ஊடாக அறிவித்தல் மற்றும் சேவைப் பெறுநர்களுக்கு பின்னூட்டலைப் பெற்றுக்கொள்ளல் போன்ற தேவைப்பாடுகளை நிறைவேற்றும் வகையில் சுற்றுலா பங்களாக்களை முன்பதிவு செய்யும் வகையில் இணையவழி அமைப்பு மேம்படுத்தப்பட்டுள்ளது.
- மக்களுக்கு முற்போக்கான தகவல்களை வழங்கும் நோக்கில் 16 ஆம் பிரிவின் கீழ் அமைச்சின் இணையத்தளத்தை மீள் உருவாக்கம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.
- மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் 360 இணையத்தளங்களை Lanka Government Cloud இல் நிறுவப்பட்ட புதிய சேவையகத்தை நிறுவி காப்புப் பிரதிகளை எடுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல்.
- மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களின் இணையத்தளங்களை பேணிச் செல்வது தொடர்பில் அவ்வுத்தியோகத்தர்களுக்கு அவசியப்படும் பயிற்சி நடவடிக்கைகளை வழங்கும் வகையில் வளவாளர்களின் பங்களிப்பினை பெறுதல் மற்றும் பயிற்றுவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- பிரதேச செயலகங்களின் தகவல்களை இற்றைப்படுத்தப்பட முடியுமான வகையில் நில செவண மற்றும் நில பியச அலுவலகங்ளின் நிர்மாணப் பணிகளுக்கான நிதி மற்றும் பௌதீக முன்னேற்றத்தை மாதாந்தம் / வாரந்தோரும் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில் மென்பொருளொன்றினை மேம்படுத்தி Lanka Government Cloud இனுள் நிறுவப்பட்டுள்ளது.
- கிராம உத்தியோகத்தர்களின் குறைதீர்ப்புக்களை அமைச்சுக்கு பெற்றுக்கொள்வதற்காக மென்பொருளொன்றினை விருத்தி செய்து நிறுவப்பட்டுள்ளது.
- கிராம உத்தியோகத்தர்கள் தொடர்பாக மக்களிடமிருந்து முன்வைக்கப்படும் முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக மென்பொருளொன்றினை விருத்தி செய்து Lanka Government Cloud இனுள் தாபிக்கப்பட்டுள்ளது.
- பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு ஏற்ப பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவாளர்களின் மனித வள முகாமைத்துவ தரவுத் தளத்தையும் மென்பொருளையும் விருத்தி செய்து Lanka Government Cloud இனுள் தாபிக்கப்பட்டுள்ளது.
- திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் கோரிக்கைக்கு ஏற்ப, பிரதேச செயலகத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பான தகவல்களை உள்ளீடு செய்வதற்கும் அத்தகவல்களை குறித்த நிறுவனங்களின் இணையத்தளங்களில் வெளியிடும் வகையில் மென்பொருளொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.
- அமைச்சின் உத்தியோகத்தர்களின் அடையாள அட்டையைத் தயாரிப்பதற்கு அவசியமான தகவல்களை உள்ளீடு செய்வதற்காகவும் அடையாள அட்டைகளின் செல்லுபடியாக்கம், அவசர பதிலளிப்புக் குறியீட்டின் மூலம் பரீட்சித்துப் பார்க்க முடியுமான மென்பொருளொன்றினை விருத்தி செய்து இற்றைப்படுத்திப் பேணிச் செல்லப்படுகின்றது.

2.1.2. நிதிப் பிரிவு

- செயல்பாட்டுச் செலவைக் குறைக்கவும் , எதிர்கால வளர்ச்சியை அதிகரிக்கவும் சிறந்த நிதி .அறிக்கை
- மாநில அமைச்சகத்தில் முன்மொழியப்பட்ட நிதிக் கட்டுப்பாட்டின் விதிகள் மற்றும் விதிமுறைகள்.
- அமைச்சகத்தில் முறையான கொள்முதல் செயல்முறை.
- கிராமப்புற மற்றும் பிராந்திய நிர்வாக நடவடிக்கைகளுக்கான ஒதுக்கீடுகளை வழங்குதல்.

2.1.3. விசாரணைப் பிரிவு

- சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கடமையாற்றக்கூடிய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை தற்போது கடமை நடவடிக்கைகளின் செயற்திறனுக்கு தடையாக இருப்பதால், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் பணியாற்றக்கூடிய அதிகாரிகளை இனங்கண்டு பணியமர்த்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்.
- பிரிவுகளுக்கடையேயான விசாரணை தகவல்களை சேகரிப்பதற்காக முறையான கணனித் தளம் (கூகிள் டிரைவ் வழியாக) பராமரிக்கப்படுகிறது.
- உநற்பத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உற்பத்தித்திறன் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
- பிரிவின் ஆவணக் கோவைகளுக்கான பதிவு அறையைப் பராமரித்தல்.
- பிரதேசத்தினுள் நலன்புரிச் சங்கமொன்று நிறுவப்பட்டு அதன் மூலம் உத்தியோகத்தர்களின் பிறந்தநாள், இறுதிச் சடங்குகள் மற்றும் பயணங்களுக்குத் தேவையான உந்துதலை வழங்குதல்.
- அலுவலர்களின் அறிவு மற்றும் உள மேம்பாட்டிற்காக நூலகம் பராமரித்தல்.
- முதலுதவி செயன்முறையை பாராமரித்தல்.

2.1.4. உள்நாட்டலுவல்கள் பிரிவு

2.1.4.1. மாவட்ட நிர்வாகப் பிரிவு

- சுதந்திர தின விழாவை கொண்டாடும் வகையில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு மட்டத்திலும் ,மீக் கன்றுகள் ,வேப்பமரக் கன்றுகள் ,குபுக் கன்றுகள் மற்றும் அவ்வந்த பிரதேசங்களுக்குப் பொருத்தமான கன்றுகளும் ,ஒவ்வொரு வீட்டுத்தோட்டத்திலும் பழங்கள் அல்லது உணவு ரீதியாக பெறுமதி வாய்ந்த கன்றுகளை நடும் திட்டம் 2021ஆம் ஆண்டில் இடம்பெற்றது.

2.1.4.2.கிராம உத்தியோகத்தர் நிர்வாகப்பிரிவு

- கிராம உத்தியோகத்தர் பதவிக்காக இலங்கை கிராம உத்தியோகத்தர் சேவையொன்றினை நிறுவி அதற்காக வேறொரு சேவைப் பிரமாணத்தை தொகுப்பதற்காக கொள்கையை ஒரு விடயமாகக் கருதி அமைச்சரவையின் அங்கீகாரம் றெறப்பட்டுள்ளது.
- அதற்காக, தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிடம் சேவைப் பிரமாண வரைவினை சமர்ப்பித்து பொருத்தமான சம்பளப் படிநிலையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
- கிராம உத்தியோகத்தர் சேவையின் I ,II மற்றும் III ஆம் தரங்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையை அரச வர்த்தமானியில் பரிசுரித்தல்.
- 2021 ஆம் ஆண்டிற்கான கிராம உத்தியோகத்தர் III ஆம் தரத்துக்கு புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்வதற்கு உரித்தான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோருவற்கு வர்த்தமானி அறிவித்தல் வெ ளியிடப்பட்டுள்ளது.
- நிர்வாக கிராம உத்தியோத்தர் பதவிக்காக உத்தியோகத்தர்களை தரமுயர்த்தலுக்கு உரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்களைக் கோர வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.
- கிராம உத்தியோகத்தர்களுக்கு ஒரு மாதத்திற்கு ரூபா 750/= இனை தொடர்பாடல் கொடுப்பனவாக சம்பளத்துடன் சேர்த்து வழங்குவதற்கும் அங்கீகாரம் வழங்கல்.
- கிராம உத்தியோகத்தர்களின் இயலளவு விருத்திக்காக சகல கிராம உத்தியோகத்தர்களுக்கும் 3 நாட்களைக்கொண்ட விசேட பயிற்சியை வழங்குதல்.இதன் கீழ் மக்கள் தொடர்பாடல், உற்பபத்தித்திறன் விருத்தி மற்றும் கிராம உத்தியோகத்தர் பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பான பயிற்சியை வழங்குதல்.
- கிராம உத்தியோகத்தர்கள் 16 மாவட்டங்களில் காணி தொடர்பான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்.

2.1.5 பொறியியல் பிரிவு

- பலவீனமான முன்னேற்றத்தில் இருந்த மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டச் செயலகங்களின் நிர்மாணப் பணிகளை இந்த வருடத்திற்குள் முழுமையாக முடிக்கும் திறன்.
- முன்னேற்றத்திற்கு இடையூறாக உள்ள சில திட்டங்கள் பற்றி அனைத்து பங்குதாரர்களுடனும் கலந்துரையாடி இந்த ஆண்டு அவற்றை முடிக்க நடவடிக்கை எடுத்தல்.
- நிதி நெருக்கடிகளால் தடைபட்ட கட்டுமானத்தொழில்களில் ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்தாலோசித்து எழும் சிக்கல்களைத் தீர்க்கும் திறன்.
- சுமார் ஆண்டுகளுக்குப் பிறகு மாவட்டச் 20 செயலகங்களில் பணிபுரியும் அறிவைப் பு பொறியியலாளர்களின்துப்பிக்க வெளியாட்களின் உதவியுடன் தொடர் பட்டறைகளை ஏற்பாடு செய்யும் திறன்.
- உள் நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சகத்தின் பராமரிப்புப் பிரிவின்

செயல்பாட்டை நெறிப்படுத்துவது மற்றும் அனைத்துப் பிரிவுகளிலும் பராமரிப்புப் பணிகளை முறையாக மேற்கொள்ளும் திறன்.

- தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பதவி உயர்வு தொடர்பாக ஏற்கனவே உள்ள பிரச்சினையை தீர்க்கும் செயலில் பங்களிப்பை வழங்க முடியும்.

2.1.6. திட்டமிடல் பிரிவு

- பௌதீக மற்றும் மனித வளத்தைப் பயன்படுத்தி திறன் மேம்பாட்டின் மூலம் வெளி தரப்பினருக்கு அனுப்பப்படும் அறிக்கைகளின் செலவைக் குறைக்கும் திறன்.

2.1.7. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு

<u>e-கிராம அலுவலர் திட்டம்</u>

- மக்களுக்கு மிக நெருக்கமான அரச கருமத்தில் உள்ள அரசு ஊழியர் என்ற வகையில், கிராம சேவையாளர் பதவிக்கான அங்கீகாரத்தை அதிகரிக்க, தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுடன் பணியாற்ற முடியுமாக இருத்தல்.
- நவீன தொழிநுட்பத்திற்கான கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் தவறான எண்ணங்களை மிகவும் சாதகமான நிலைக்குக் கொண்டுவரும் திறன் மற்றும் குறைந்த கணினி அறிவு கொண்ட 3,500 க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற கிராம அலுவலர்களுக்கு தனிபட்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன.
- குடும்ப மற்றும் குடிமக்கள் தரவைச் சேகரித்து புதுப்பிப்பதற்கான பல்வேறு அரசு நிறுவனங்களின் முயற்சிகள் மற்றும் செலவுகளைக் குறைக்கும் ஒரு விரிவான சமூக அடிப்படையிலான இலத்திரனியல் தரவுத்தளத்தை உருவாக்கத் தொடங்குவதற்கு இயக்குதல் குடும்ப மற்றும் குடிமக்கள் தரவு சேகரிப்பு துண்டுப்பிரசுரம் மக்கள்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் உள்ளிட்ட நிபுணர்கள் குழுவால் (சிங்களம் / ஆங்கிலம் மற்றும் தமிழ் / ஆங்கிலம் மூலம்) பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
- 06/10/2018 திகதியிடப்பட்ட உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 2018/09 மூலம் மேற்கொள்ளப்பட்ட தரவுத்தளத்தைப் பயன்படுத்தி கிராம உத்தியோகத்தர்களால் வழங்கப்படும் 22 வகையான சான்றிதழ்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- திட்ட ஒழுங்குமுறை மற்றும் தலைமைத்துவத்திற்காக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் செயற்குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இந்த திட்டமானது கிராம சேவையாளர் தொழிற்சங்கங்களின் தீவிர பங்களிப்பையும் பெற்றுள்ளது. LGN (இலங்கை அரசாங்க வலையமைப்பு) சேவைகளைப் பெறுவதற்காக ICTA (தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம்) உடன் ஒரு தனியான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- குடிமக்கள் பாவனையாளர்களின் தரவுகளை மென்பொருளில் இணைப்பதற்காக சிறப்பு 'இ-சேவைகள்' தளம் உருவாக்கப்பட்டுள்ளது.
- பொருளாதார மறுவாழ்வு மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியினால் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களின் பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களின் அடிப்படையில், பொதுச் சேவைகளை திறமையான மற்றும் நட்புறவான பராமரிப்பில், நாடளாவிய ரீதியில் அந்தத் தரவுகளை சேகரிப்பதற்கான திட்டங்களை உருவாக்குவதற்கு உத்தேச தரவு சேகரிப்பு முறையை குறிப்பாக ஆன்லைன் முறை மூலம் துரிதப்படுத்தல்.
- திட்ட வழிநடத்தல் குழுவின் ஒத்திழைப்புடன் திட்டத்திற்கான விளம்பரம் மற்றும் தகவல்தொடர்புகளை வழங்கும் SELACINE நிறுவனத்தின் உதவியைப் பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- இலத்திரனியல்-கிராம அலுவலர் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட தரவுத்தளத்தின் அமைச்சர்கள் அமைச்சரவையின் அங்கீகாரம், தற்போது செயல்படாத வீட்டு அடிப்படையிலான பட்டியல் அமைப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தேசிய தரவுத்தளமாக உள்ளது. அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் அவர்களுக்கு கீழ் உள்ள அனைத்து கிளை அலுவலகங்களிலும் உள்ள அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் தரவுகளை இ-கிராம அலுவலர் அமைப்பில் சேகரிப்பது குறித்து ஆலோசனை வழங்குவதற்காக பொது சேவை அமைச்சகத்துடன் இணைந்து ஒரு சுற்றறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

2.2 சவால்கள்

2.2.1. நிர்வாகப் பிரிவு

- ஏற்பட்டிருந்த கோவிட் - 19 தொற்று நோய் நிலைமை காரணமாக திட்டமிடப்பட்டிருந்த திட்டங்களை எதிர்பார்க்கப்பட்ட அளவில் நிறைவேற்ற முடியாமற் போனது.
- புதிய உத்தியோகத்தர்கள் அதிக அளவில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள் என்பதோடு, அனுபவம் மிக்க உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை மற்றும் விடயம் சார்ந்த பயிற்சி பெற்ற

உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்தினுள் இடமாற்றங்களைப் பெற்றுச்செல்லல்.

- அமைச்சின் மற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் புதிய தகவல் தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தும் அளவு சிறந்த மட்டத்தில் பேணப்பட்டு வராமை.
- தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவற்ற உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை.
- கோவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக 2021 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா விடுதிகளை ஒதுக்கும் நடவடிக்கை எதிர்பார்க்கப்பட்ட அளவில் மேற்கொள்ளப்படாமை.
- சுற்றுலா பங்களாக்களுக்கு நிலவும் கேள்வியை பூர்த்தி செய்வதற்கான இட வசதிகள் காணப்படாமை.

2.2.2. அபிவிருத்திப் பிரிவு

- 2020 இல் கொவிட் 19 காரணமாக எதிர்பார்த்த திட்டமிட்ட நிகழ்ச்சிகளை நடாத்தமுடியாமல் போனமை.
- கோவிட் - 19 தொற்றுநோய் காரணமாக, சந்தையில் கட்டுமானப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது மற்றும் சில பணிகள் எதிர்பார்த்தபடி நிறைவு செய்ய முடியாமல் போனமை.
- தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை 05/2019 இன் பிரகாரம் புதிய செயற்திட்டங்களை செயற்படுத்த முடியாமை மற்றும் 2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்திற்கு இணங்க செயல்படாமை.
- ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின்படி பணப் பற்றாக்குறை (கட்டிட பழுதுபார்ப்புக்கான பணப்பற்றுச்சீட்டுக்கள் ரூ. 4.95 மில்லியன், பிபி தெழு பொலன்னறுவை ரூ. 34.75 மில்லியன் மற்றும் நில செவன ரூ. 1.82 மில்லியன்) இந்த ஆண்டுக்கான ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி பற்றுச்சீட்டுக்கள் ஒப்படைக்கப்படும்.2021 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம் கடைபிடிக்கப்படவில்லை.

2.2.3. நிதிப் பிரிவு

- சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் மாவட்ட செயலகங்களில் இருந்து முன்னறிவிக்கப்பட்ட தகவல்களை சரியான நேரத்தில் சேகரிப்பதில் சிரமங்கள்.
- சில முன்னறிவிப்பு அளவீட்டு பயன்பாடுகள் நிதி அறிக்கைக்கு ஏற்றது அல்ல.
- நிதி செயல்திறன் தகவல் இல்லாமை.
- முறையான கட்டணம் செலுத்தும் முறையைப் பராமரிப்பதற்கு போதிய முன்னறிவிப்புடன் கூடிய ஏற்பாடுகள் இல்லாமை.
- பணம் செலுத்தும் செயல்முறையின் சார்பாக தேவையான முழு ஆவணங்களுடன் முழுமையான வவுச்சர் சமர்ப்பிக்கப்படாது.
- வரையறுக்கப்பட்ட பட்ஜெட் ஒதுக்கீடுகள்.
- கூட்டங்கள் மற்றும் கொள்முதல் TEC குழு கூட்டங்களுக்கான நேரம் மற்றும் தேதிகளைக் கண்டறிதல்
- பிரிவுகளில் இருந்து வரும் அவசர கோரிக்கைகள்.
- ஆண்டுக்கான அனைத்து செலவினங்களையும் தீர்ப்பதற்கு திறைசேரி மூலம் தேவையான ஒதுக்கீடுகள் வழங்கப்படாமை.

2.2.4. விசாரணைப் பிரிவு

- பொது மக்களின் முறைப்பாடுகளுக்குப் பதிலளிக்கும் வகையில் புலனாய்வு அலுவலர்களின் பற்றாக்குறை.
- மாவட்ட செயலகங்களில் தாபிக்கப்பட்டுள்ள புலனாய்வு அலகின் செயற்பாடுகள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுதல்.
- புலனாய்வு போது தனிநபர் பாதுகாப்பு தொடர்பான பிரச்சனைகள்.
- புலனாய்வு நடவடிக்கைகளில் அதிகாரிகளின் தனிப்பட்ட பாதுகாப்பு மீதான அச்சுறுத்தல்கள்.
- அரச அதிபர்களிடமிருந்து தகவல் பெற்றுக்கொள்வதிலுள்ள பிரச்சனைகள் (உதாரணம் பொலிஸ் மற்றும் இலஞ்சம் தொடர்பான சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு.
- தமிழ் மொழி மூல ஊடகங்களிலிருந்து கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகளை மொழிபெயர்ப்பதில் காணப்படும் பிரச்சனைகள்.
- Covid 19 காரணமாக புலனாய்வு நடவடிக்கைகளுக்குத் தடைகள்.

2.2.5. உள்நாட்டலுவல்கள் பிரிவு

2.2.5.1. மாவட்ட நிர்வாகப் பிரிவு

- பிரிவின் கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது கோவிட்-19 தொற்று நோய்க்கு மத்தியில் கடமைகளை உரிய வகையில் தாமதமின்றி நிறைவேற்றுவது சவாலாக பிரிவில் இணைக்கப்பட்டுள்ள பணியாட்தொகுதியினரின் வினைத்திறன் காரணமாக குறித்த கடமை நடவடிக்கைகளை உரிய வகையில் நிறைவேற்ற முடியுமாக இருந்தது.

2.2.5.2. கிராம உத்தியோகத்தர் நிர்வாகப்பிரிவு

- கிராம உத்தியோகத்தர் அலுவலக முகாமைத்துவப்போட்டியை நடாத்துவதற்கான தேர்வளவுகள் மற்றும் ஆலோசனைகள் சகல மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலளாளர்களுக்கு அனுப்பிவைப்பட்டுள்ளதோடு அதன்படி 2022

ஆம் ஆண்டு பெப்ரவரி தேசிய மட்டத்தில் அந்நடவடிக்கைகளை நிறைவு செய்தல்.

- அனைத்து கிராம உத்தியோகத்தர்களுக்கும் டிஜிட்டல் அடையாள அட்டையொன்றினை வழங்குதல்.

2.2.6. பொறியியல் பிரிவு

- கட்டுமானத் துறையில் பொருட்கள் பற்றாக்குறையால் தொழில்துறை முன்னேற்றத்தில் மந்தநிலை காணப்படுகின்றமை.
- நிலையான வளர்ச்சிக்காக அரசு நிதியை சிக்கனமாக பயன்படுத்த முன்மொழிவதில் எழும் சிக்கல்கள்.
- கட்டுமானத்தின் முன்னுரிமையை தீர்மானிப்பதில் அனைத்து பங்குதாரர்களையும் கலந்தாலோசிக்காமல் அவசர முடிவுகளை எடுத்தல்.
- அதிநவீன வசதிகளுடன் கூடிய அலுவலக வளாகங்களை நிர்மாணிப்பதில், கட்டுமானத்திற்குப் பிறகு அவற்றின் செயல்பாடு, பராமரிப்பு மற்றும் சேவைக்கான எதிர்காலத் திட்டங்கள் எதுவும் இல்லாமல் உள்ளமை.
- மாவட்ட செயலகங்களுக்கு போதிய ஏற்பாடுகள் இல்லாமை.
- பிரதேச செயலக கட்டிடங்களை கட்டம் வாரியாக நிர்மாணிப்பதால் தரம் சம்பந்தமான பிரச்சினைகள் மற்றும் அதிக செலவு ஏற்படுகிறது.
- வாடிக்கையாளரின் அனைத்துத் தேவைகளையும் உள்ளடக்கிய கட்டடக்கலைத் திட்டங்களைத் தயாரித்தல்.
- கோவிட் 19-தொற்றுநோய்க்கு மத்தியில் விரும்பிய இலக்குகளை அடைவதில் சவாலாக இருக்கும்.
- தொழில்முறை முடிவை செயல்படுத்துவதில் பிற தரப்பினரால் ஏற்படும் சிக்கல்களால் தாமதம் ஏற்படுதல்.

2.2.7. பிரதேச நிர்வாக மறுசீரமைப்பு பிரிவு

<u>e-கிராம அலுவலர் திட்டம்</u>

- கோவிட்-19 சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டுதல்கள் தொடர்பான கட்டுப்பாடுகள்/வரையறைகளின் கீழ், கிராம சேவையாளர் உறிப்படுத்தல் மற்றும் குடும்ப தரவைப் புதுப்பித்தல் மற்றும் கிராம அலுவலர்களுக்கு தகவல் தொழில்நுட்பப் பயிற்சி வழங்குதல் ஆகியவற்றிற்குத் தேவையான மேலதிகமான அடிமட்ட மனித வளங்களை வழங்குவது சவாலாக உள்ளது.
- கிராம உத்தியோகத்தர்களுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மடிக் கணனிகள் மற்றும் கணனி அச்சு இயந்திரங்களை வழங்குவதற்கான கொள்வனவு முறை தொடர்பாக பொது நிதித் திணைக்களத்திடம் இருந்து தெளிவு பெறப்பட்டுள்ளதுடன் அதற்கான அமைச்சரவை தீர்மானங்கள் மற்றும் பணியை நிறைவு செய்வதற்கு மிகவும் பயனுள்ள மாற்று முறைகள் கண்டறியப்பட வேண்டும்.
- வெளிவாரி பங்குதாரர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஆதரவை சரியான நேரத்தில் பெறாததால் திட்டத்தின் ஒட்டுமொத்த செயல்பாட்டின் மீதான தாக்கம்.

யாழ்ப்பாணத்தில் காப்பகம்/ முடுக்கிக்கான வணிக மையத்தை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துதல்

- காப்பகத்தை பராமரிப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான போதுமான கட்டிடங்களை அடையாளம் காண்பதிலுள்ள சிரமங்கள்.
- பணியின் தற்காலிக இடைநிறுத்தம் காரணமாக திட்டமிடல் மற்றும் உள்ளூர் நிதியளிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2021 ஆம் ஆண்டளவில் திட்டத்திற்கான நிதியுதவியை முந்தைய அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சகத்தால் பெற முடியவில்லை.
- இந்திய அரசின் நிதி உதவியைப் பெறுவதற்கு இரு நாடுகளுக்கும் இடையே தற்போது கையெழுத்திடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) முறையாகப் புதுப்பிக்கப்பட்டு நீட்டிக்கப்பட வேண்டும்.

"பிராந்திய நிர்வாக சீர்திருத்த உதவி" திட்டம்

- ஒருங்கிணைந்த நிதியில் இருந்து திட்டத்திற்கு நிதியளிக்க முடியாததால், மாற்று ஆதாரங்களை நாட வேண்டியுள்ளது.

2.3. எதிர்கால இலக்குகள்

2.3.1. நிர்வாகப்பிரிவு

- அமைச்சின் உத்தியோகத்தர்களின் அடையாள அட்டையைத் தயாரிப்பதற்கு உருவாக்கப்பட்ட மென்பொருளிற்கே பிரத்தியேகக் கோவையின் விபரங்களை உள்ளீடு செய்வதற்கு முடியுமான வகையில் மேம்படுத்தல்.
- சுற்றுலா பங்களாக்களின் அறை வசதிகள், உட்கட்டமைப்பு வசதிகளையும் விருத்தி செய்தல்.
- உள்நாட்டலுவல்கள் பிரிவின் சகல உத்தியோகத்தர்களையும் உள்ளடங்கும் வகையில் பயிற்சித் திட்டங்களை வழங்குதல்.

- சேவை உற்பத்தித்திறனை அதிகரிக்க முடியுமான வகையில் புதிய நிறுவனக் கட்டமைப்புபை ஏற்படுத்துதல்.
- மனித வள அபிவிருத்தி துறையின் புதிய போக்குகளை கவனத்திறக் கொண்டு பயிற்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை விரிவுபடுத்துதல்.
- அமைச்சின் மற்றும் அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களின் புதிய படைப்புத் திறன்களை ஊக்குவிப்பதற்காக ஆக்கத்திறன் போட்டிகளை ஏற்பாடு செய்தல்.
- அமைச்சு மற்றும் அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கணனிப் பயன்பாடுகளையும் அதை உருவாக்கிய கலைஞர்களையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தல் மற்றும் அப்பயனர்களை பொதுவான பயன்பாட்டுக்கு எடுக்கும் வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- அமைச்சு மற்றும் அமைச்சுக்குச் சொந்தமான நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் புதிய முறைமைகளை அறிமுகப்படுத்தும் எண்ணக்கருக் கட்டுரைகளை மதிப்பீடு செய்து, அவற்றின் பயன்பாடு தொடர்பான தேவையான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.

2.3.2. அபிவிருத்திப் பிரிவு

- அங்குனுகொலபலஸ்ஸ புதிய நான்கு மாடி பிரதேச செயலகக் கட்டிடம் ரூபா.மில்லியன் 304 செலவில் நிர்மாணம்.
- மாதம்பகம பிரதேச செயலகம்- தற்போது உப அலுவலகமாக இயங்கும் மாவட்ட செயலகத்தின் ரூபா.மில்லியன் 433.4 செலவில் கட்டிட நிர்மாணம்.
- குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலகம் - மூன்று மாடிக்கட்டிடம் ரூபா.மில்லியன் 242 செலவில் நிர்மாணம்.
- குளியாப்பிட்டிய கிழக்கு பிரதேச செயலகம் - மூன்று மாடிக்கட்டிடம் ரூபா.மில்லியன் 248 செலவில் நிர்மாணம்.
- ஆராச்சிகட்டுவ மேற்கு பிரதேச செயலகம் - மூன்று மாடிக்கட்டிடம் ரூபா.மில்லியன் 307 செலவில் நிர்மாணம்.
- அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் ரூபா.மில்லியன் 1,991.00 செலவில் கட்டிட நிர்மாணம்.
- தெஹிவளை மாவட்ட செயலகத்தின் ரூபா.மில்லியன் 1,150.00 செலவில் கட்டிட நிர்மாணம்.
- முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின்– ஆம் 2 கட்டம் ரூபா.மில்லியன் 565.00 செலவில் கட்டிட நிர்மாணம் மாவட்ட செயலகத்தின் கட்டிட நிர்மாணம் –கிளிநொச்சி 2ஆம் கட்டம்.
- மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் ரூபா.மில்லியன் 209.00 செலவில் கட்டிட நிர்மாணம், இருப்பு மற்றும் மேலதிக வேலை.

2.3.3. நிதிப் பிரிவு

- தொடர்புடைய நிறுவனங்களில் அனைத்து நிலைகளுக்கும் பயனுள்ளபொறுப்புணர்வு , மற்றும் வெளிப்படையான வெளியீட்டை வழங்குதல்
- திறமையான மற்றும் பயனுள்ள கட்டண முறையை மேம்படுத்தவும்.
- நிறுவனத்தில் திறமையான சேவையை உறுதி செய்வதற்காக சரியான தரம் மற்றும் அளவுடன் சரியான நேரத்தில் சரியான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல்.
- மாநில உள்விவகார அமைச்சு ,மாவட்டம் மற்றும் பிரதேச செயலகங்களின் நிதிகளை முறையான முகாமைத்துவம்.

2.3.4. விசாரணைப் பிரிவு

2021.02.25	போக்குவரத்து தொடர்பிலான பயிற்சி (அபிவிருத்தி உத்தியோகத்தர் -நிர்வாகம்)	1	**1 நாட்கள்**	3,500.00	**உள்நாடு**	
2021.03.15-2021.03.17	பிரதேச மட்டத்தில் புலனாய்வு அதிகாரிகளுக்கான பயிற்சி		**03 நாட்கள்**	508,204.50	**உள்நாடு**	
2021.03.23 2021.05.05	சிங்களம் டிப்ளோமா- களனி பல்கலைக்கழகம்	2	01 வருடம்	100,000.00	**உள்நாடு**	
2021.04.23 2021.01.22	உயர் அலுவலகர்களுக்கான படநெறி கட்டணம் (சிரேஷ்ட உதவி செயலாளர் (நிர்வாகம்),உதவி செயலாளர் (நிர்வாகம்), உதவி செயலாளர (நிறுவனம் மற்றும் பயிற்சி)	3	02 வருடம்	739,000.00	**உள்நாடு**	
2021.03.22	ஆங்கில டிப்ளோமா - திருமதி. சாலிகா உதவி செயலாளர் (மாவட்ட நிர்வாகம்)	1	01 வருடம்	75,000.00	**உள்நாடு**	
2021.03.22	ஆங்கில டிப்ளோமா - திரு.பராகிரம, உதவி செயலாளர் (பிரதேச நிர்வாகம்)	1	01 வருடம்	75,000.00	**உள்நாடு**	
2021.07.01	ஆங்கில டிப்ளோம - திரு.திமுது விஜேசிங்க, கணக்காளர்	1	01 வருடம்	75,000.00	**உள்நாடு**	
2021.07.01	ஆங்கில டிப்ளோம - திருமதி.பதிரண, கணக்காளர்	1	01 வருடம்	75,000.00	**உள்நாடு**	
2021.07.1	முதுமாணி பட்டம் -பிரதான கணக்காளர்	1	03 வருடம்	310,000.00	**உள்நாடு**	*
2021.08.10	முதுமாணி பட்டம் - கணக்காளர்	1	2 வருடம்	145,000.00	**உள்நாடு**	
2021.09.03	முதுமாணி பட்டம் **பொது நிர்வாகம் (கொழும்பு பல்கலைக்கழகம்)**	1	02 வருடம்	150,000.00	**உள்நாடு**	
2021.09.14	முதுமாணி பட்டம் **பொது நிர்வாகம் (கொழும்பு பல்கலைக்கழகம்)**	1	02 வருடம்	150,000.00	**உள்நாடு**	
2021.10.21	தனிப்பட்ட கோவை முகாமைத்துவம்	8	2 நாட்கள்	40,000.00	**உள்நாடு**	
2021.11.25	அலுவலக முறைமை - சிங்களம்	52	01 நாட்கள்	9,800.00	**உள்நாடு**	
2021.11.30	**சான்றிதழ் பாடநெறி - தகவல் தொழிநுட்பம்**	66	1 நாட்கள்	9,600.00	**உள்நாடு**	
2021.12.13	அலுவலக முறைமை - தமிழ்	16	1நாட்கள்	4,800.00	**உள்நாடு**	
2021.12.08	ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பிலான பயிற்சி	5	01 மாதம்	171,000.00	**உள்நாடு**	
2021.12.13	சிங்கள மொழி பெயர்ப்பு - களனி பல்கலைக்கழகம்	1	01 வருடம்	60,000.00	**உள்நாடு**	
2021.11.13	சிங்கள மொழி பெயர்ப்பு - களனி பல்கலைக்கழகம்	1	01 வருடம்	60,000.00	**உள்நாடு**	
2021.11.01	அரச மொழி கொள்கை பயிற்சி பாடநெறி - தமிழ்	67	150H			
		421		**2,851,563.37**		

***வெளியீட்டு அறிவு**

1. பயிற்சியின் மூலம் அலுவலகர்களின் உற்பத்தி திறனை அதிகரிப்பதனூடான அலுவலகர்களின் பணிசூழல் தொடர்பில் திருப்தியடைதல்.
2. நிறுவனத்தின் நோக்கத்தினை அடைந்துகொள்ளும் நோக்கில் புதிய வழிகளை திறந்துவிடல்.
3. அந் நோக்கங்களை அடைவதன் மூலம் நிறுவனத்தின ஒட்டுமொத்த நோக்கத்தினை அடைந்துகொள்ளல்.
4. பயிற்சி மூலம் வழங்கும் புதிய அறிவினையும் தொழிநுட்பத்தினையும் நிறுவனத்தில் நடைமுறைப்படுத்தல்.
5. நிறுவனத்தின் நடவடிக்கைகளை சரியாக ஒழுங்கமைத்தல்.
6. ஏனைய நிறுவனங்களுக்கடையில் அங்கிகரிக்கப்பட்ட உயர்ந்த நிறுவனமாக மாற்ற கூடியதாக அமைதல்.
7. நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் மற்றும் நிதி ஒதுக்கீடு இன்மை காரணமாக 2020 ஆண்டில் முன்மொழியப்பட்ட பயிற்சி திட்டங்களை நடத்துவது கடினமாக உள்ளது.

7.இணக்க அறிக்கை

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை (இணக்கமானது /இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதற்கான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
1	**பின்வரும் நிதிநிலை அறிக்கைகள்/கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன**			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பண கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	இணக்கமற்றது		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	இணக்கமற்றது		
1.5	சிறப்பு முற்பணக் கணக்கு	இணக்கமற்றது		
1.6	ஏனையவை	இணக்கமற்றது		
2	**புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணுதல் (நி.பி 445)**			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் அடிப்படையில் நிலையான சொத்துக்கள் பதிவு பராமரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டது	இணக்கமானது		
2.2	தனிப்பட்ட ஊதியங்கள் பதிவேடு/ தனிப்பட்ட ஊதிய அட்டைகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்குச் சுருக்கங்களையும் (CIGAS)தயார் செய்து பொது திறைசேரிக்கு, உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப்பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இருப்புப்திவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA-N20) பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (FR 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டுள்ளது			
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரிவிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு பரிவர்த்தனையையும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அதிகாரிகள் மூலம் அனுப்பும் வகையில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது	இணக்கமானது		

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை (இணக்கமானது /இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதற்கான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
3.4	11.05.2014 திகதிய அரச கணக்குச் சுற்றறிக்கை இல171/2004ன் படி, அரசாங்க ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாடுகள் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயல்பாட்டு திட்டத்தினை தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தினை தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தினை தயாரிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
4.4	வருடாந்திர மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய திணைக்களத்தில் உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
4.5	வருடாந்திர பணப்புழக்கம் கருவூல செயல்பாட்டுத் துறைக்கு சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
5	**கணக்காய்வு வினவல்கள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினவல்களையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு குறிப்பிடும் திகதியில் பதிலளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	**உள்ளக க்கணக்காய்வு**			
6.1	134(2)) டிஎம்ஏ/1-2019 இன் அடிப்படையில் ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக க்கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக க்கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்	இணக்கமற்றது		இந்த விடயம் கணக்காய்வு மற்றும் நிர்வாகக்குழு கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்படும்
6.3	அனைத்து உள்ளக க்கணக்காய்வு அறிக்கைகளின் தகவல்களையும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய தணிக்கைச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக க்கணக்காய்வு அறிக்கைகளின் 134(3) இன் நிதிப் பிரமாணக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துக்குழு**			
7.1	DMA 1-2019 சுற்றறிக்கையின் படி, ஆண்டிற்கு குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துக்குழுக்கூட்டங்கள் நடத்தப்படல்	இணக்கமற்றது		தற்போதுள்ள சூழ்நிலை (Covid-19)காரணாமாக 2021 இல் நடைபெறாமல் போனாலும் அனைத்துக்கூ

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை (இணக்கமானது /இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதற்கான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
				ட்டங்களும் 2022 இல் நடைபெறும்
	ஆதன முகாமைத்துவம்			
8.1	சொத்துக்கள் மற்றும் அகற்றல்கள் கொள்வனவு பற்றிய தகவல்கள் சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை இல 01/2017 இன் 07ன் பந்தியின் பிரகாரம் தகவல்கள் கட்டுப்பாட்டாளர் கணக்காளர் தலமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டன.	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13ஆம் பந்நியின் படி சுற்றறிக்கையின் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கும் அந்த அதிகாரியை கம்ப்றோலர ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் ஒரு பொருத்தமான தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்	இணக்கமானது		
8.3	அரச நிதி சற்றறிக்கை இல.05/2016 இன் படி பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு,தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் மேலதிகமானவ மற்றும் பற்றாக்குறைகள் அறியப்பட்டு பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டன.	இணக்கமானது		
8.5	FR 772 இன் அடிப்படையில் கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுவது இடம்பெற்றது	இணக்கமானது		
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து உரிய திகதியில் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்த பின்னர் மாதங்களுக்குள் அப்புறப்படுத்தல் 06	இணக்கமானது		
9.3	வாகன பதிவுப்புத்தகங்கள் பராமரிக்கப்படல்,புதுப்பிக்கப்படல்.	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்துத்துக்கும் தொடர்பான நி.பி. 103, 104, 109மற்றும் 110இன் படி நடவடிக்கை எடுக்கப்படல்.	இணக்கமானது		
9.5	2016.12.29 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 2016/30 இன் 3.1 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் பாவனை மீண்டும் பரீசிலித்தல்	இணக்கமானது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகை காலத்திற்குப் பின்னர் மாற்றப்படும்	இணக்கமானது		


#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை (இணக்கமானது /இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதற்கான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
10.2	மதிப்பாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக்கணக்குகளைத் தீர்த்தல்	இணக்கமானது		
10.3	வங்கி நல்லிணக்க அறிக்கைகள் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்தல், சரி செய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளைத் தீர்த்தல்	இணக்கமானது		
11	**வழங்கல்களைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கப்பட்ட வழங்கல்களை வரையறை மீறாதபடி செலவிடல்.	இணக்கமானது		
11.2	FR 94(1) இன் படி ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புகள் ஆண்டின் இறுதியில் தொடர்ந்திருக்கும்	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வரம்புகளுக்குள் இணங்கியது	இணக்கமானது		
12.2	நிலுவையில் உள்ள கடன்கள் குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டது	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்த கடன் நிவுவைகள் தீர்க்கப்பட்டுவிட்டன	இணக்கமானது நிலுவையில் உள்ள நான்கு கடன் நிலுவைகளில் இரண்டு நிலுவையில் உள்ள நிலுவைகள் தீர்க்கப்பட்டன மற்றும் 31.12.2021 நிலுவையில் உள்ள ஒரு இருப்பு 24.01.2022 அன்று செலுத்தப்பட்டது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புத்தொகைகளை அகற்ற FR571 இன் படி நடவடிக்கை எடுத்தல்	இணக்கமானது		
13.2	பொது வைப்புத்தொகைக்கான கட்டுப்பாட்டுப் பதிவேடு புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது	இணக்கமானது		
14	**முற்பணக்கணக்கு**			
14.1	மீழாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் உள்ள மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகிறது	இணக்கமானது		
14.2	FR 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து ஒரு மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	FR 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறி தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தங்களுடன் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படல் வேண்டும்	இணக்கமானது		
15	**வருமானக் கணக்கு**			
15.1	விதிகளின்ன படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திரும்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	இணக்கமானது		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக்கணக்கில் வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	இணக்கமானது		
15.3	FR 176 இன் படி நிலுவைத்தொகையை கணக்காளர் நாயகத்திற்குச் சமர்ப்பித்தல்	இணக்கமானது		

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை (இணக்கமானது /இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதற்கான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அனுமதியளிக்கப்பட்ட ஆளணியினருக்கு ஊதியம் வழங்கல்	இணக்கமானது		
16.2	அனைத்து அலுவலர்களுக்கும் எழுத்து மூலமான கடமைப் பட்டியல் வழங்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
16.3	20.09.2017 ஆந் திகதிய 04/2017 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கு தகவல்களை வழங்குதல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு சரியான தகவல் பதிவேடு பராமரிக்கப்பட்டு பதுப்பிக்கப்படுகிறது	இணக்கமானது		
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்களை அதன் இணையத்தளத்தின் மூலம் வழங்குதல் மற்றும் இணையத்தளம் அல்லது மாற்று வழிகளின் ஊடாக நிறுவனத்தின் மீதான மக்களின் பாராட்டுக்கள் அல்லது குற்றச்சாட்டுக்களை வெளியிடுவதற்கு வசதிகளை ஏற்படுத்தியிருத்தல்.	இணக்கமானது		
17.3	தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 08 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்	இணக்கமானது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல மற்றும் 05/2008 . இன் (1)05/2018 படி பிரஜைகள் சாசனம் அல்லது பிரஜைகள் வாடிக்கையாளர் சாசனம் ஒன்று நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது.	இணக்கமானது		
18.2	அச்சுற்றறிக்கையின் பந்தி 2.3யைப் பொறுத்தவரை , பிரஜைகள் அல்லது பிரசைகள் வாடிக்கையாளர் சாசனம் சாசனத்தை தொகுக்கவும் செயற்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனத்தினால் ஒரு முறைமை வகுக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
19	**மனித வளத் திட்டத்தைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் பிரகாரம் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
19.2	மேற்கூறிய மனித வளத் திட்டத்தில் ஒவ்வொரு ஊழியரும் ஆண்டொன்றுக்கு 12 மணித்தியாலங்களுக்குக் குறையாத குறைந்தபட்சம்	இணக்கமானது		

#	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலமை (இணக்கமானது /இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதற்கான விளக்கம்	எதிர்காலத்தில் இணக்கமற்றதை தவிர்ப்பதற்கு முன்மொழியும் திருத்த நடவடிக்கைகள்
	பயிற்சி வாய்ப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது			
19.3	குறித்த சுற்றறிக்கையின் இணைப்பு 01இல் உள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டுள்ளன	இணக்கமானது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் அபிவிருத்தி திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் திறன்களைக் கட்டியெழுப்பும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படல்.	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பொறுப்புக்கள்**			
20.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட முன்னைய ஆண்டுகளுக்கான கணக்காய்வு பந்திகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தப்பட்டுள்ளன	இணக்கமானது		

தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

1.4.நிறுவன விளக்கப்படம்



அனர்த்த முகாமைத்துவப்பிரிவு

1. நிறுவன ரீதியான தோற்றப்பாடு / நடைமுறைப்படுத்தல் சுருக்கம்

1.1. அறிமுகம்

இலங்கை மக்கள் முன்னொருபோதும் முகம் கொடுத்திராத சுனாமி அனர்த்தத்தினால் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆந் திகதி 35,000 இற்கும் அதிகமான உயிர்கள் பலியாகியமை அனர்த்த முகாமைத்துவ விடயத்தை மிகவும் முக்கியமானதாக மாற்றிய முக்கிய காரணியாகும். இப்பேரழிவினால் 5 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தனர்.

உயிர் இழப்புகள், பொருளாதார வீழ்ச்சி மற்றும் சமூகத்தில் அதன் தாக்கம் குறித்து, நலன் சார்ந்த விடயமான அனர்த்த முகாமைத்துவத்துக்கான முறையான வழிமுறை மற்றும் சட்டக் கட்டமைப்பின் தேவை எழுந்தது. அதன் பிரகாரம், அத்தகைய பேரிடர்களை வெற்றிகரமாகக் கையாள்வதற்குத் தேவையான நிறுவன மற்றும் சட்டக் கட்டமைப்பைத் தீர்மானிக்க பாராளுமன்றத் தெரிவுக்குழு தாபிக்கப்பட்டது. தெரிவுக்குழுவின் பரிந்துரைகளை அடுத்து, 2005 ஆம் ஆண்டு 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டம் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது

இதன் பிரகாரம், 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தினால் இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபையும், அனர்த்த முகாமைத்துவ நிலையமும் தாபிக்கப்பட்டன. இந்நிறுவனங்களை மேலும் வலுவூட்டும் முகமாக 2006ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அனர்த்த முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் பற்றிய அமைச்சரவை அந்துஸ்துள்ள அமைச்சு தாபிக்கப்பட்டதுடன், 2010ஆம் ஆண்டு ஏப்பிறல்மாத்ம் 30ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு எனப் பெயரிடப்பட்டு தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் அமைச்சின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. மீண்டும், 2018.05.01ஆந் திகதி 2069/17 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் நீர்ப்பாசன, நீர்வள மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சாக பெயரிடப்பட்டது. இதனகத்து, 2018.12.28 ஆந் திகதிய 2103/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சாகவும் 2019.12.10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டதுடன், பின்னர், 2020.08.09 ஆந் திகதி முதல் 2187/24 ஆம் இலக் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சாக பெயரிடப்பட்டுள்ளது. மீண்டும் 2021ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ஆந் திகதிய 2215/20 ஆம் இலக் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சாக பெயரிடப்பட்டுள்ளது.

அனர்த்த முகாமைத்துவத்தின்போது அமைச்சின் கீழ் உள்ள தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் எனும் நிறுவனங்கள் மூலம் அமைச்சுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தும் முகமாக அனர்த்தமொன்று நிகழ்வதற்கு முன்னரும் அனர்தமொன்று நிகழ்கையிலும் மற்றும் அனர்தமொன்று நிகழ்ந்ததன் பின்னரும் பாரிய சேவைகளை ஆற்றுகின்றது. ஆகையால், அனர்த்தங்களிலிருந்து மக்களது வாழ்க்கை, சொத்து மற்றும் சேவைகளை பாதுகாத்தல், உறுதியான சமூகமொன்றுக்கான சமூக பாதுகாப்பை உறுதிசெய்தல், அனர்த்தத்துக்குப் பின்னர் அனர்த்தங்களை குறைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் ஆகியவற்றை மேற்கொள்கின்றது. இதற்கு மேலதிகமாக, தேசிய பாதுகாப்பு பிரிவின் கீழ் இயங்கும் ஒன்பது நிறுவனங்கள் தற்போது இந்த இராஜாங்க அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சாக முன்னெடுக்கப்படுகின்றது.

1.2. நிறுவனத்தின் நோக்கு, பணி, நோக்கங்கள்

நோக்கு



பணி



அனர்த்த முகாமைத்துவப்பிரிவு

''பாதுகாப்பான இலங்கை''

இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளின் பாதகமான விளைவுகளை திறம்பட தடுப்பதன் மூலமும் குறைப்பதன் மூலமும் இலங்கையில் வளமான மற்றும அபிமானமானன வாழ்க்கைக்கு உதவுதல்.

தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையம்

அனர்த்தங்களுக்குப் பின்னரான சிறந்த நிவாரண சேவைகள் ஊடாக பாதுகாப்புமிக்க இலங்கையை நோக்கிப் பயணித்தல்.

இயற்கையாகவும் மனிதர்களினாலும் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தங்களினால் ஏற்படும் ஆபத்தான தாக்கங்களுக்கு பதிலிருத்தல் மற்றும் வழமை நிலைக்கு கொண்டு வருவதன் மூலம் மனித உயிர்கள், சொத்துக்கள் மற்றும் மக்கள் வாம்வை பாகாக்கல்.

நோக்கங்கள்



அனர்த்த முகாமைத்துவப்பிரிவு

- அனர்த்த முகாமைத்துவ கொள்கைகளை தயார் செய்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- அனர்த்த முன்னெச்சரிக்கை மற்றும் பிரச்சார பொறிமுறையை நடைமுறைப்படுத்துதல்.
- சகல அடுக்குகளுக்குமான அனர்த்த முகாமைத்துவ திட்டங்களை தயார் செய்தலும் நடைமுறைப்படுத்துதலும்.
- அபிவிருத்தி திட்டங்களுக்கான அனர்த்த அபாய தணிப்பு நடைமுறைகளை உள்ளீர்த்தல்.
- அபிவிருத்தி திட்ட செயன்முறைக்கான தாக்க மதிப்பீட்டை உள்ளீர்த்தல்
- அனர்த்த அபாய தணிப்பு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட பிரதேசங்கள் அனர்த்தத்துக்கு உட்படுவதை தணித்தல்.
- அனர்த்த அபாய மதிப்பீடு மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்.
- அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குதல்.
- அனர்த்த அபாய முகாமைத்துவ செயன்முறையை வினைத்திறன் மிக்கதாக மேற்கொள்வதற்காக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- அனர்த்தங்களுக்குப் பின்னரான புனர்வாழ்வளிப்பு மற்றும் மறுசீரமைப்பு.
- அனர்த்த முகாமைத்துவ பிரிவுசார்ந்த ஏனைய நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்கள் மத்தியிலான ஒருங்கிணைப்பு.

தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையம்


- சமூகம், சுற்றாடல் மற்றும் பொருளாதாரத்துக்கு அனர்த்தங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற தீங்குபயக்கும் தாக்கங்களை தணிப்பதற்காகவும் அனர்த்த நிவாரணம் வழங்கலுக்கான தேசிய கொள்ளளவுகளைப் பலப்படுத்துவதன் மூலம் நிலையான அபிவிருத்திக்கான தேசிய நோக்கத்துக்கு பங்களிப்பு நல்குதல்.
- இந்நோக்கங்களை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாவும் மேற்கொள்ளும் முகமாக தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையமானது அனர்த்த நிவரண சேவைகளை திட்டமிடுதல், நடைமுறைப்படுத்துதல் மற்றும் பின்னாய்வினை மேற்கொள்கின்றது. இந்நடவடிக்கைகள் 2020-04-01 ஆந் திகதி முதல் அனர்த்த முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அடிக்கடி வெளியிடப்படும் அமைச்சரவை அங்கீகாரங்கள் மற்றும் சுற்றறிக்கைகளின் ஆலோசனையின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.
- குறிப்பிட்ட சுற்றறிக்கைகள் மற்றும் ஆலோசனைகளின் பிரகாரம் நான்கு முன்னுரிமை துறைகளின் கீழ் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரண சேவைகள் வழங்கப்படுகின்றன. இதற்க மேலதிகமாக அனர்த்த நிவாரண சேவைகளை வழங்கும் பொறிமுறையின் வினைத்திறன் மற்றும் பயனறுதிப்பாட்டை விருத்தி செய்வதற்காக ஐக்கிய நாடுகளின் பிரதி நிறுவனங்கள், அரசார்பற்ற அமைப்புகள் மற்றும் தனியார் துறையின் தொழிநுட்ப மற்றும் நிதிப் பங்களிப்பில் தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் பயிற்சி, விழிப்புணர்வூட்டல் மற்றும் கொள்திறன் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதகின்றன.

1.3. பிரதான பணிகள்

- அனர்த்த முகாமைத்துவ விடயம் மற்றும் இதனுடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களின் விடயங்களுடன் தொடர்புடைய கொள்கைகள், வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களை தயார் செய்தல், பின்னாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.
- இயற்கை விபத்துக்கள் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் அனர்த்தங்களை தணித்தல், பதிலிருத்தல், மற்றும் நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தலும் முகாமைத்துவம் செய்தலும்.
- தேசிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட தேசிய இடர் முகாமைத்துவ திட்டம் மற்றும் தேசிய அவசரநிலை கருமமாற்றல் திட்டத்தை தயார் செய்தல்.
- இடர்களை நெகிழ்ச்சிக்குட்படுத்துதல், பதிலிருத்தல் மற்றும் மீள்எழுச்சி குறித்த வெளிநாட்டு நன்கொடை கருத்திட்டங்களை ஆரம்பித்தலும் ஒருங்கிணைத்தலும்.
- மேற்குறிப்பிட்ட பணிகள் உரிய நேரத்தில் மேற் கொள்ளப்படுவதை உறுதிப்படுத்தும் முகமாக அமைச்சு, இராஜாங்க அமைச்சுஉள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புகளுடனான ஒருங்கிணைப்பு.
- சுற்றாடல் தாக்கங்களுக்கு தாக்குப் பிடிக்கக்கூடிய தொழிநுட்ப தரத்தினைக் கொண்ட வீடுகளை நிர்மாணிப்பதை ஊக்குவித்தல்.
- வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறைகளுக்குப் பொருத்தமான தொழிநுட்பம் தொடர்பிலான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளை ஊக்குவித்தல்.
- வளிமண்டலவியல் ஆய்வு மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.
- இயற்கை இடர்களை முன்எதிர்வகூறல் மற்றும் இது பற்றிய துறைகள் குறித்து விழிப்புணர்வூட்டுதல்.
- இயற்கை இடர்கள் மற்றும் மனிதர்களால் மேற்கொள்ளப்படும் இடர்கள் பற்றிய விழிப்புணர்வூட்டல் வேலைத்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- இயற்கை இடர்கள் மற்றும் மனிதர்களால் மேற்கொள்ளப்படும் இடர்களின்போது மீட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.
- சர்வதேச மனிதாபிமான நிவாரணசேவை நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- அனர்த்த முகாமைத்துவ விடயத்துடன் தொடர்புடைய திணைக்களங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள சகல விடங்கள் தொடர்பிலும் மேற்பார்வை செய்தல்.


1.4.நிறுவன விளக்கப்படம்

1.4.1 அனர்த்த முகாமைத்துவப்பிரிவு



1.4.2.தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையம்

தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நிறுவன வரைபடம்



1.5. அமைச்சின் கீழ் காணப்படும் திணைக்களங்கள் / திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் / மாவட்ட செயலகத்தின் கீழ் காணப்படும் பிரதேச செயலகங்கள்

அனர்த்த முகாமைத்துவ பிரிவு

01. இடர் முகாமைத்துவத்துக்கான தேசிய சபை
02. அனர்த்த முகாமைத்துவ நிலையம்
03. தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையம்
04. வளிமண்டலவியல் திணைக்களம்
05. தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பு

1.6. அமைச்சு / திணைக்களங்களின் கீழ் காணப்பம் நிதியங்கள் (அனர்த்த முகாமைத்துவ பிரிவு

- இல்லை –

1.7 வெளிநாட்டு நன்கொடைகள் கிடைக்கப்பெறும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

வளிமண்டலவியல் திணைக்களம்			
கருத்திட்டத்தின் பெயர்	**அணுசரணை வழங்கல்**	**மதிப்பீடு செலவு ரூ.மி.**	**கருத்திட் காலவரையறை**
டொப்லர் ரேடார் முறைமை	ஜைய்கா நிறுவனம் (JICA)	486.65	05 வருடங்கள்
தேசிய கட்டிட ஆராய்சி அமைப்பு			
நிலைஉறுதிப்படுத்தல் முறைகள் மூலம் மண்சரிவு அபாயத்தை தணிக்கும் கருத்திட்டங்கள்	சீனா (China)	19,116	05 வருடங்கள்
மண்சரிவு மற்றும் இது சார்ந்த இடர்களை தணித்தல் மற்றும் இது சார்ந்த கொள்திறனை உறுதிப்படுத்துவதற்காக கட்டமைப்புரீதியிலான மற்றும் கட்டமைப்புரீதியற்ற செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தலும் நடைமுறைப்படுத்துதலும்	ஜைய்கா நிறுவனம் (JICA)	450.00	03 வருடங்கள்

2.முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு சிறப்பு வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்கால நோக்குகள்

2.1.முன்னேற்றம்

2.1.1.அனர்த்த முகாமைத்துவப்பிரிவு

- 09அமைச்சரவை நிரூபங்கள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 06 பாராளுமன்ற கேள்விகளுக்கான பதில் வழங்கப்பட்டுள்ளது.
- அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு பொதுமக்கள் 212 முறைப்பாடுகள் குறித்து முறைப்பாடுகளை செய்துள்ளரென்பதுடன், குறிப்பிட்ட முறைப்பாடுகளை குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு முன்வைத்து இவற்றுக்குத் தேவையான தீர்வுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- மனஎழுச்சி சார்ந்த அறிவு மற்றம் வாழ்க்கைத் திறன் மேம்படுத்தல் குறித்த மூன்றுநாள் செயலமர்வினை நடாத்துதல்.
- அமைச்சின் பணியாட் குழுவினரின் உளச் சோர்வு, அசௌகரிய நிலைமை மற்றும் உளவீழ்ச்சியை தணிப்பதற்காக சங்கீத மற்றும் களியாட்ட செயலமர்வினை நடாத்துதல்.
- 2022ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை திட்டத்தை தயார் செய்தல் மற்றும் 2021ஆம் ஆண்டின் செயலாற்றுகை திட்டத்துக்கு ஏற்ப முன்னேற்ற கலந்துரையால்களை முன்னெடுத்தல்.
- அனர்த்த முகாமைத்துவ பிரிவின் கீழ் இயங்கும் நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் கருத்திட்டங்கள் / வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை ஜனாதிபதி செயலகம், கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை திணைக்களம் மற்றும் அரசாங்க கணக்காய்வு திணைக்களத்துக்கு அறிக்கையிடுதல்.
- 2020ஆம் ஆண்டின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையினை தயார் செய்து உள்நாட்டு அலுவல்கள் பிரிவுடன் இணைந்து பாராளுமன்றத்துக்கு முன்வைத்தல்.
- 2021ஆம் ஆண்டுக்காக தயார் செய்யப்பட்டுள்ள முன்னேற்ற அறிக்கையினை பாராளுமன்றத்துக்கு முன்வைத்தல்.
- வருடாந்த மற்றும் அரையாண்டு அறிக்கைகளை தயார் செய்வதற்கு தேவையான அனர்த்த முகாமைத்துவம் பற்றிய தரவுகளை மத்திய வங்கிக்கு முன்வைத்தல்.
- 2022 ஆம் ஆண்டு வரவு - செலவு பிரேரணைகளின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்காக அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கு உரித்தான நிறுவனங்களினால் முன்வைக்கப்பட்டுள்ள 07 கருத்திட்ட பிரேரணைகள் மற்றும் உள்ளக அலுவல்கள் பிரிவின் 03 கருத்திட்டங்களையும் உள்ளடக்கியதக 10 கருத்திட்டங்களை தேசிய செயல்நுணுக்க திணைக்களத்துக்கு முன்வைத்தல்.
- நிரல் அமைச்சுக்களுக்கான கொள்கைகள் மற்றும் ஐந்து வருட திட்டங்களை தயார் செய்தற்காக அனர்த்த முகாமைத்து துறையின் பங்களிப்பினை நல்குதல் மற்றும் இது சார்ந்த முன்னேற்றத்தை தேவையான விதத்தில் அறிக்கையிடுதல்.
- அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான செந்தாய் சட்டகம் 2015-2030 இன் கீழ் இலங்கையினுள் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்தவ அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டன. இதன் கீழ் 07 உலகளாவிய இலக்குகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- நிலைபேறான இலக்குகளை அடைவதற்காக அமைச்சுடன் இணைந்துள்ள நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வேற்படுத்தி நிலைபேறான அபிவிருத்தி செயல்நுணுக்க திட்டம் பூர்த்தி செய்யப்பட்டு நிலைபேறான அபிவிருத்தி சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளத. இச்செயல் நுணுக்க திட்டத்தை செயற்படுத்துவதிலான முன்னேற்றமானது 2020 ஆம் ஆண்டு செயலாற்றுகை அறிக்கையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
- தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை மீண்டும் தயார் செய்து இற்றைப்படுத்தும் நடடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.
- காலநிலை மாற்றங்கள் பற்றிய செயலகத்துடன் இணைந்து பரிஸ் ஒப்பந்தத்தின் பிரகாரம் அமைச்சுக்க பொறுப்பளிக்கப்பட்டுள் நட்ட மற்றும் சேத துறைகள் தொடர்பி 2017-2019 காலகட்டத்துக்காக அடையாளம் காணப்பட்டுள்ள தேசியரீதியில் தீர்மானிக்கப்பட்டுள்ள பங்களிப்பினை மீளாய்வு செய்து 2021-2030 காலகட்டத்துக்கான 5 புதிய பங்களிப்புகள் அடையாளம் காணப்பட்டள்ளதுடன், இதன் செயலாற்றுகை திட்டத்தை தயார் செய்யும் பணிகள் தற்போது இறுதி படிமுறையில் உள்ளன.
- உலக உணவுத் திட்டத்தின் நிதி மற்றும் தொழிநுட்ப பங்களிப்பின் கீழ் அனர்த்த அபாய முகாமைத்துவத்துக்கு நிதி வழங்கலானது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன், அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்க உரித்தான நிறவனங்களினால் குறிப்பிட்ட கருத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக, தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டம், தேசிய அவசர நிலைமை நடைமுறைப்படுத்தல் திட்டத்தை தயார் செய்யும் பணிகளுக்கும் உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.
- சுபீட்சத்தின் நோக்க தேசிய கொள்கையினை நடைமுறைப்படுத்துவதன் கீழ் அனர்த்த முகாமைத்துவ சட்டத்தைதிருத்தும் பணிகள் தற்போது இறுதி படிமுறையில் காணப்படுகின்ற.
- அனர்த்த முகாமைத்துவ கொள்கையினை திருத்தும் பணிகளுக்கு தற்போது நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்தியதன் பிற்பாடு அனர்த்த முகாமைத்துவ கொள்கையினை திருத்தும் பணிகள் துரிதப்படுத்தப்படவுள்ளன.
- அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய நிவாரண சேவைகள் நிலையத்தை ஒருங்கிணைத்து " அனர்த்த முகாமைத்துவ அதிகாரசபை" என அனர்த்த முகாமைத்துவ பிரிவின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்புக்குத் தேவையான வசதிகள் மற்றும் தேவையான முழுமையான சட்டரீதியான அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான அமைச்சரவை பத்திரமானது பல்வேறு திருத்தங்களின் கீழ் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்பட்டுள்ளது.
- அனர்த்தத்துக்கு உட்பட்டுள்ள பிரதேசங்கள், தொடர்ச்சியாக அனர்த்தத்துக்கு உட்படும் மற்றும் அனர்த்த அபாயத்துக்க உட்பட்டுள்ள மக்கள் மற்றும் பிரதேசங்கள், கட்டிடங்கள், வர்த்தகங்கள் மற்றும் விவசாயக் காணிகள் ஆகிய அனைத்து தகவல்களையும் உள்ளடக்கியதாக தேசிய அனர்த்த தரவு முறைமை முன்னெடுக்கப்படுவதுடன்,

www.desinventra.lk இணைய முகவரியின் ஊடாக தரவுகளை இலவசமாகப் பெற்று பயன்படுத்துவதற்கான வசதி வழங்கப்பட்டுள்ளது.

- உள்ளக கணக்காய்வு விசாரணைகள் மற்றும் விசேட விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
- அமைச்சின் கீழ் காணப்பம் நிறுவனங்களின் 15 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
- விசேட கணக்காய்வு அவதானிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

2.1.2. தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையம்

திறைரேி நிதி ஏற்பாடு மற்றும் செலவுகள்

தொடர் இலக்கம்	செலவு விபரம்	நிதி ஏற்பாடு ரூ	செலவு ரூ
01	மீண்டெழும்	781,890,000.00	642,693,994.50
02	மூலதனம்	1,594,500,000.00	1,070,101,062.05
மொத்தம்		2,376,390,000.00	1,712,795,056.55

வினைத்திறன்மிக்க அனர்தத நிவாரண சேவைகள் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு துரித நிவாரணங்களை வழங்குதல்.

இயற்கை அனர்த்தமொன்று இடம்பெற்று ஆகக்குறைந்த காலப்பகுதியில் அதற்கான பதிலிருப்பினை தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் மேற்கொள்கின்றது. அனர்த்தம் இடம்பெற்றது முதல் மக்களுக்குத் தேவையான சமைத்த உணவுகளை வழங்குதல் மற்றும் அனர்த்த நிலைமை தீவிரமடையும் பட்சத்தில் அவர்களைப் பாதுகாப்பன இடங்களுக்கு ஆற்றுப்படுத்துதல் ஆகியவற்றை மேற்கொள்கின்றது. அனர்த்த நிலைமை வழமைக்குத் திரும்பி மீண்டும் தமது குடியிருப்புகளுக்குத் திரும்பும் வரையில் அவர்களது அடிப்படைத் தேவைகளை வழங்குதுல், உயிரிழப்பு மற்றும் காயங்களுகளுக்கான நஷ்ட ஈட்டினை வழங்குதல் மற்றும் தமது நாளாந்த வாழ்க்கை வழமைக்கு திரும்பும் வரையில் உலர் வழங்கல் ஆகியன மேற்கொள்ளப்படுகின்றன. 2019ஆம் ஆண்டில் ஆரம்பித்த கொவிட் 19 பெருந்தொற்று காரணமாக பாதிக்கப்பட்டவர்களக்கு நிவரணங்கள் வழங்கப்படுகின்றன. இதற்காக மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவி மட்டத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்குத் தேவையான பங்களிப்பு வழங்கப்படுகின்றது. மேலும், கொவிட் காரணமாக நிகழும் உயிரிழப்புகளின்போது உறவினர்கள் பூதவுடலை பொறுப்பேற்காதுள்ள சந்தர்ப்பங்களில் இறுதிக்கிரியைகளுக்காக ஏற்படும் செலவினையும் ஏற்கின்றது.

2021ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசெம்பர் வரையில் நாட்டைப் பாதித்த இயற்கை அனர்த்தங்கள் காரணமாக 247562 குடும்பங்களைச் சேர்ந்த 930381 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.. இதில் 16787 குடும்பங்களைச் சேர்ந்த 66230பேர் 420 பாதுகாப்பு நிலையங்களில் தங்கவைக்கப்பட்டார்கள் என்பதுடன் 132 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்க அடிப்படை வசதிகளை வழங்குவதிலான முன்னேற்றம்

விபரம்	அலகு	அளவு	செலவு ரூ.
சமைத்த உணவு	நபர்கள்	546,302	156,114,117.64
உலர் உணவு	குடும்பங்கள்	40,106	18,627,405.00
உயிரிழப்புகள்	எண்ணிக்கை	112	5,525,000.00
எரிபொருள்			582,435
நிர்வாகம்			3,223,575.22
ஏனையவை / அவசர பதிலிருப்பு (1,000,000)			96,247,699.51
மொத்தம்			280,320,232.37

- **அனர்த்தங்கள் காரணமாக சேதமடைந்துள்ள வீடுகள், சிறிய மற்றம் நடுத்தர சேதங்களுக்கான நஷ்டஈடு வழங்கல்.**

இயற்கை அனர்த்தங்களினால்வ வீடுகள், மனைப்பொருட்கள் மற்றும் பிறிதொரு காப்புறுதியினால் காப்பீடு செய்யப்படாத, வருடாந்த வருமானம் ரூ.10 மில்லியனை விஞ்சாத சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தங்களுக்கு ஆகக்கூடிய ரூ.2.5மில்லியன் வரையறையில் நஷ்டஈடு வழங்கப்படும். இயற்கை அனர்த்தங்கள் காரணமாக சேதமடைந்துள்ள வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக மதிப்பீட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பிக்கப்படும் வரையில் குறிப்பிட்ட வீடுகளை விரைவில் திருத்திக் கொள்தவதற்காக பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 10,000/- முற்பணக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது. பூர்த்தி செய்யப்பட்டள்ள விண்ணப்பப்படிவங்கள் மதிப்பீட்டு குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் மீதி நஷ்டஈட்டுத் தொகை வழங்கப்படும். 2021 ஜனவரி மாதம் முதல் டிமெம்பர் மாதம் வரையில் நாட்டைத் தாக்கியுள்ள இயற்கை அனர்த்தங்கள் காரணமாக 360 முழுமையான வீட்டு சேதங்களும் 26146 பகுதியளவிலான வீட்டு சேதங்களும் 1494 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகளுக்கான சேதங்களும் பதிவாகியுள்ளன. மேற்படி வீடுகள் மற்றும் சொத்துக்களுக்களுக்கான சேதங்களும் 2020ஆம் ஆண்டில் நஷ்டஈடு வழங்கப்படாத

பயனாளிகளுக்கான நஷ்டஈடும் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது.

ரூ.10,000 வரையில் முற்பணம் வழங்குதல்				ரூ.25,000 வரையிலான சொத்து சேதங்கள்		ரூ.25,000இற்கு அதிகமான சொத்து சேதங்கள்		மொத்த நிதி ஏற்பாடுகளின் அளவு
முழுமையான சேதங்களின் எண்ணிக்கை	பகுதியளவிலான சேதங்களின் எண்ணிக்கை	மொத்தம்	நிதி ஏற்பாடு	எண்ணிக்கை	நிதி ஏற்பாடு	எண்ணிக்கை	நிதி ஏற்பாடு	
360	26,041	26,401	233,439,575.86	4,683	46,846,069.70	1,812	97,074,664.20	377,360,309.76

- **அனர்த்தம் மற்றும் அனர்த்த அபாயம் காரணமாக அகற்றப்பட்டுள்ள குடும்பங்களை மீள்குடியமர்த்துதல்.**

கேகாலை மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டிலும் 2017ஆம் ஆண்டில் சில ஏனைய மாவட்டங்களிலும் மண்சரிவு அபாயம் காணமாக வீடுகள் சேதமடைந்துள்ள மற்றும் உயர் மணசரிவு அபாயம் காரணமாக தமது வசிப்பிடங்களிலிருந்து அகற்றப்பட வேண்டுமென தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் அடையாளம் காணப்பட்டுள்ள குடும்பங்களை மீள்குடியமர்த்தும் வேலைத்திட்டம் 14 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டது.

தற்போது அடையாளம் காணப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் அடையாளம் காணப்படும் 15,025 பயனாளிக் குடும்பங்களை பாதுகாப்பான இடங்களில் மீள்குடியமர்த்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம், பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, கேகாலை, களுத்துறை, மாத்தறை,இரத்தினபுரி, அம்பாந்தோட்டை, காலி, கொழும்பு, கம்பஹ, குருநாகல் மற்றும் மொணறாகலை ஆகிய மாவட்டங்களில் 121 பிரதேச செயலகப் பிரிவுகளில் மாவட்ட செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கேற்ப கட்டிட ஆராய்சி அமைப்பினால் தமது வசிப்பிடங்களிலிரந்து அகற்றப்பட வேண்டமென இதுவரையில் அடையாளம் காணப்பட்டுள்ள 13846 பயனாளிக் குடும்பங்களை மீள்குடியமர்த்தும் பணிகள், இந்நிறுவனத்தின் தொழிநுட்ப பங்களிப்பு மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் நிதி வழங்கல் மற்றும் ஒருங்கிணைப்பின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

அமைச்சரவை அங்கீகாரத்துக்கு ஏற்ப பின்வரும் 03 மாற்று வழிமுறைகளின் கீழ் பயனாளிக் குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்படுகின்றன.

- வீட்டுடன் காணியை கொள்வனவு செய்வதற்கு ரூ.1.6 மில்லியன் வழங்குதல்.
- காணியைக் கொள்வனவு செய்து வீட்டை கட்டுவதற்கு, காணிக்கு ரூ.0.4 மில்லியனும், வீட்டை நிர்மாணிப்பதற்கு ரூ.1.2 மில்லியனும் வழங்குதல்.
- அரச காணியில் வீட்டை நிர்மாணிப்பதற்கு ரூ.1.2 மில்லியன் வழங்குதல்.

2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மீள்குடியமர்த்தல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளதுடன். செலவிடப்பட்டுள்ள மொத்த நிதித் தொகை ரூ. 4462.82 மில்லியனாகும்.

மீள்குடியமர்த்தப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை	காணித்துண்டுகள் வழங்கப்பட்டுள்ள மற்றும் வீட்டை அமைப்பதற்கான காணியைக் கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை	நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் வரும் வீடுகளின் எண்ணிக்கை	நிர்மாணப்ப ணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை
13846	4652	2053	1726

கேகாலை மாவட்டத்தில் 2016ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள மீள்குடியமர்த்தல் வேலைத்திட்டத்தின் 2021-12-31 ஆந் திகதியிலான முன்னேற்றம் 97% ஆகும்.இத்தரவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

ஆரம்பிக்கப் பட்டுள்ள வருடம்	பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை	நடைமுறைப்படுத்தப்படும் மாவட்டங்கள்	குடியமர்த்தப்பட்டுள்ள எண்ணிக்கை	ஆரம்பிக்கப் பட்டுள்ள வருடம்	பயனாளி குடும்பங்களின் எண்ணிக்கை	நடைமுறைப்படுத்தப்படும் மாவட்டங்கள்
2016	1688	கேகாலை	1578	108	2,00532.	2 வீடுகள் கொள்ளவனவு செய்யப்படவுள்ளன.

- **உலர் வானிலை ஏற்படும் சேதத்தை தணிப்பதற்காக நிதி மற்றும் பௌதீக வசதி நல்குதல்.**

நாட்டைப் பாதிக்கும் உலர் வானிலை காரணமாக தமது நாளாந்த குடிநீர்த்த தேவையை பூர்த்தி செய்ய முடியாது ஏராளமானவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். 2017இல் 1,113,858 குடும்பங்களும் 2018இல் 567,987 குடும்பங்களும் 2019இல் 312,383 குடும்பங்களும் மற்றும் 2020 இல் 310424 குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. 2021ஆம் ஆண்டு முதல் பாதிக்கப்பட்டுள்ள 134992 குடும்பங்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக நாட்டின் சகல மாவட்ட செயலகங்களுக்கும் 364 டிரக்டர் பவுசர்கள்,133 லொறி பவுசர் மற்றும் 11936 நீர்த்தாங்கிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், 2021ஆம் ஆண்டில் குடிநீர் வழங்குவதற்காக ரூ.40.59 மில்லியன் குறிப்பிட்ட மாவட்ட செயலாளர்களக்கு வழங்கப்பட்டுள்ளது.

- **பாதுகாப்பு நிலையங்களின் வசதிளை மேம்படுத்துதல்.**

இயற்கை இடர்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கு ஏற்படும் நெருக்கடிளைக் குறைத்து அதற்கு சிறப்பாக முகம் கொடுப்பதற்காக தொடர்ச்சியாக அனர்த்தங்களுக்கு உள்ளாகும் பிரதேசங்களில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள பர்துகாப்பு நிலையங்களின் துப்பரவேற்பாடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அவர்களின் அடிப்படைத்தே வைகளைப் பூர்த்தி செய்ய முடியும்.

இயற்கை இடர்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கு ஏற்படும் நெருக்கடிளைக் குறைத்து அதற்கு சிறப்பாக முகம் கொடுப்பதற்காக தொடர்ச்சியாக அனர்த்தங்களுக்கு உள்ளாகும் பிரதேசங்களில் மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 325 பர்துகாப்பு நிலையங்களின் துப்பரவேற்பாடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணிக்ள 2018ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன.

வருடம்	மாவட்ட செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை	பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை	புனரமைக்கப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை	நிதி ஏற்பாடு ரூ.மி.	செலவு ரூ.மி.
2018	20	106	164	102	92.51
2019	24	189	96	100	78.26
2020	14	34	38	58.40	56.08
மொத்தம்			298	260.40	226.85

2021ஆம் ஆண்டில் இதன் இரண்டாம் படிமுறையாக மேலும் 300 பாதுகாப்பு நிலையங்களை புனரமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. இதற்கேற்ப, 2021ஆம் ஆண்டில் பாதுகாப்பு நிலையங்களை புனரமைப்பதிலான முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

வருடம்	மாவட்ட செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை	பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை	புனரமைக்கப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை	நிதி ஏற்பாடு ரூ.மி.	செலவு ரூ.மி.
2021	23	54	48	75	53.01

அனர்த்த நிவாரண சேவை தகவல் முறைமையை வலுவூக்கம் செய்தல். அனர்த்த நிவாரண சேவை நடவடிக்கைகளை இலகபடுத்துவதற்காக 2013ஆம் ஆண்டில் தயார் செய்யப்பட்டுள்ள அனர்த்த நிவாரண சேவை வழங்கல் திட்டமானது 2017இல் உலக உணவு அமைப்பின் (WFP) தொழிநுட்ப உதவியுடன் நிவாரண சேவை வழங்கல் பொறிமுறையினை வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதி மிக்கதாகவும் மேற்கொள்ளும் முகமாக அனர்த்த நிவாரண சேவைகள் முன்ஆயத்தம் மற்றும் பதிலிருப்பு வேலைத்திட்டமாக விருத்தி செய்யப்பட்டு ஒன்லைன் முறைமையாக (On Line System) விருத்தி செய்யப்பட்டுள்ளது. அவசர தேவையின்போது செயற்படுவதற்குத் தேவையான பின்வரும் தகவல்களை இத்தகவல் முறைமையின் ஊடாக பெற்றுக்கொள்ளக் கூடியவாறு இது தயார் செய்யப்பட்டுள்ளது.

- திடீர் அனர்த்த நிலைமையின்போது நிவாரணப் பணிகளுக்காக நேரடியாகத் தொடர்புபடும் உத்தியோகத்தர்களின் தொடர்பாடல் தகவல்கள்
- கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் தொடர்பாடல் தகவல்கள்
- வெள்ள அபாயத்துக்கு உட்படக்கூடிய கிராம உத்தியோகத்தர் பிரிவுவாரியான வரைபடம்.
- அடையாளம் காணப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பாதிக்குக்கு உட்படக்கூடிய குடும்பங்களின் எண்ணிக்கை
- பாதிப்புக்கு உட்படக்கூடிய குடும்பங்களை தங்க வைக்கக்கூடிய பாதுகாப்பு நிலையங்களின் தகவல்கள்

- பாதுகாப்பு நிலையங்களின் கருமமாற்றல் குழுக்கள் பற்றிய தகவல்கள்
- எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய வேண்டிய அடையாளம் காணப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையங்கள் பற்றிய தகவல்கள்.
- பாதுகாப்பு நிலைய சேவை வழங்குநர்களது தகவல்கள்
- அனர்த்த நிவாரண சேவை குழுக்கள் பற்றிய தகவல்கள்
  அவசர நிலைமையின்போது தேவைப்படுமென அடையாளம் காணப்பட்டுள்ள உணவுப் பொருட்கள் பற்றிய விபரம்.

இத்தகவல்களை http://www.ndrsc.lk/ இணையத்தளம் ஊடாக எந்தவொரு பயன்பாட்டாளருக்கும பெற்றுக் கொள்ளக்கூடியவாறு உள்ளடக்கப்பட்டுள்ளது. தற்போதைய நிச்சயமற்ற திட்டத்தை வருடாந்தம் இற்றைப்படுத்துவதன் மூலம் பிரதேச மட்டத்திலான அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் நிவாரண சேவை உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் திட்டங்களை மேலும் சிறப்பான மேற்கொள்வதற்கான இயலுமை காணப்படுகின்றது.

அனர்த்தங்கள் காரணமாக தேமடையும் வீடுகளுக்கு வினைத்திறன் மிக்கதாகவும் பயனுறுதிமிக்கதாகவும் பயனாளிகளுக்கு முற்பணத்தை வழங்கும் நோக்கில் 2018ஆம் ஆண்டு முதல் வீடுகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கலின்போது முன்வைக்கப்படும் விண்ணப்பப்படிவங்களை பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பதிவதற்காக ஒன்லைன் தரவு முறைமையொன்று (On Line System) தயார் செய்யப்பட்டுள்ளது. http://housing.ndrsc.lk/authentication தற்போது இதில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள விண்ணப்படிவங்களின் எண்ணிக்கை கீழே காட்டப்பட்டுள்ளது.

வருடம்	விண்ணப்படிவங்களின் எண்ணிக்கை
2019	20039
2020	11613
2021	8654
மொத்தம்	40306

2022ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ள கருத்திட்டங்கள்

கருத்திட்டத்தின் பெயர்	மதிப்பீடு செய்யப்பட்டள்ள மொத்த செலவ ரூ.மி. (TEC)	குறைநிரப்பு மதிப்பீட்டுக்கு ஏற்ப ஒதுக்கீடு செய்யப்படவுள்ள கிரயம் ரூ.மி.
உயர் மண்சரிவு அபாயம் மற்றும் மண்ரிவு காரணமாக பாதிக்கப்படும் மக்களை மீள்குடியமர்த்தல்.	21,050	500
அனர்த்தங்கள் காரணமாக பாதிக்கப்படும் மக்களை தங்க வைக்கும் பாதுகாப்பு நிலையங்களை மேம்படுத்துதல்.	300	50

2.2. சவால்கள்

- செந்தாய் சட்டக சமவாயத்தின் இலக்குகள் மற்றும் பரிஸ் ஒப்பந்தத்தின் பிரகாரம் உடன்பாடு எட்டப்பட்டுள்ள தேசியரீதியில் உடன்பாடு எட்டப்பட்டுள்ள பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்காக பங்காளி நிறுவனங்களின் முனைப்பான பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளுதல்.
- அனர்த்த அபாய முகாமைத்துவத்தின் வெற்றியானது உண்மையான தரவுகள் மற்றும் தகவல்கள் மீது தங்கியுள்ளமையினால், இத்தரவுகள் மற்றும தகவல்களை பரிமாற்றிக் கொள்வதில் சிக்கல்கள் காணப்படுதல்.

2.3. எதிர்காலத் திட்டங்கள்

2.3.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு

- காணப்படும் 2005ஆம் ஆண்டு 13ஆம் இலக்க இடர் முகாமைத்துவ சட்டத்தை காலத்துக்கேற்ற முறையில் திருத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- அனர்த்தத்தின் பின்னர் வழமைக்கு திரும்புவதற்கான கொள்கைகளை உள்ளடக்கியவாறு காணப்படும் அனர்த்த முகாமைத்துவ கொள்கையினை திருத்துதல்.
- தேசிய அனர்த்த மகாமைத:தவ திட்டத்தை தயார் செய்து அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.
- அனர்த்த அபாயத்தை தணிப்பதற்கான செந்தாய் சட்டக திட்டத்தை குறிப்பிட்ட பங்காளி நிறுனங்களுடனான ஒருங்கிணைப்பின் வழியாக உடன்பாட எட்டப்பட்டுள்ள இலக்குகளை அடைவதற்கான நடடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- பரிஸ் ஒப்பந்தத்தின் பிரகாரம் உடன்பாடு எட்டப்பட்டுள்ள தேசியரீதியில் தீர்மானிக்கப்பட்டுள்ள பங்களிப்பின் கீழ்
- உபாயவழிமுறை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக பங்காளி நிறுவனங்களுடன் இணைந்து செயற்படுதல்.
- நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் சுபீட்சத்தின் நோக்கு தேசிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் முனைப்பான பங்களிப்பிஇந்நிறுவனத்தின் கீழ் காணப்படும் நிறுவனங்களினால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியை ஈடுபடுத்தி நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி கருத்திட்டங்களின் முன்னேற்ற மீளாய்வின் மூலம் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை உரிய காலகட்டத்தில் அடைவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதல்.
- **நிலையான இலக்குகளை அடைய** அனர்த்த முகாமைத்துவ ன வழங்குதல்.
- **பிரிவின் செயலில் பங்களிப்பு.**
- **அபிவிருத்தி இலக்குகள் மற்றும் செழிப்பு பார்வை தேசிய அபிவிருத்தி திட்டம்**

2.3.2.தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையம்

- எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த நிலைமைக்கு முகம் கொடுப்பதற்காக பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் அனர்த்த நிவாரண சேவைகளுக்கான முன்ஆயத்தமாக " அனர்த்த நிவாரண சேவைகள் முன்ஆயத்தம் மற்றம் பதிலிருப்பு பற்றிய திட்டத்தை" செயற்படுத்துதல்.

- மீள்குடியமர்த்தல் கருத்திட்டத்தை வினைத்திறன் மிக்கதாதக முன்னெடுத்து, துரிதமாக உயர் அபாய பிரதேசங்களில் வாழும் மக்களை மீள்குடியமர்த்துதல்.
- பாதுகாப்பு நிலையங்களை நிர்மாணிக்கும் பணிகளைப் பூர்த்தி செய்தல்.
- மிகவும் வினைத்திறனானதாகவும் சரியானதாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக இணையத்தள தரவு முறைமையை இற்றைப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்.
- வீட்டு சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்கலை வினைத்திறனாக மேற்கொள்ளுதல்.
- சுபீட்சத்தின் நோக்கு தேசிய கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுடன் இசைவாக்கம் பெற்றவாறு அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையத்தின் உத்தியோகத்தர்கள் ஒருங்கிணைந்து செயற்படுதல்.

4. செயலாற்றுகை சுட்டி

4.1.1. அனர்த்த முகாமைத்துவ பிரிவு

விசேட சுட்டிகள்	உத்தேச விளைவின் சதவீதமாக (%)மெய் விளைவு		
	100%- 90%	75%-89%	50%- 74%
அனர்த்த அபாயத்தை புரிந்துகொள்ளுதல்		√	
அனர்த்த அபாய முகாமைத்துவ நடவடிக்கைகளை உறுதிப்படுத்துதல்	√		
அனர்த்த மீட்டெழுச்சி மீது (Resilience) முதலீடு செய்தல்		√	
மிகவும் சிறப்பாக மீள்கட்டியெழுப்புவதற்காக முன்ஆயத்தத்தை உயர்த்துதல்.		√	

4.1.2. தேசிய அனர்த்த நிவாரணசேவைகள் நிலையம்

தேசிய இலக்கு

- சிறப்பான அனர்த்தங்களுக்குப் பின்னரான சேவைகள் வழியான பாதுகாப்பான இலங்கையை கட்டியெழுப்புதல்.
- சமூகம், சுற்றாடல் மற்றும் பொருளாதாரத்துக்கு அனர்த்தங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற தீங்குபயக்கும் தாக்கங்களை தணிப்பதற்காகவும் அனர்த்த நிவாரணம் வழங்கலுக்கான தேசிய கொள்ளளவுகளைப் பலப்படுத்துவதன் மூலம் நிலையான அபிவிருத்திக்கான தேசிய நோக்கத்துக்கு பங்களிப்பு நல்குதல்.
- 2020இல் இயற்கையாகவும் மனிதர்களினாலும் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தங்களினால் ஏற்படும் ஆபத்தான தாக்கங்களுக்கு பதிலிருத்தல் மற்றும் வழமை நிலைக்கு கொண்டு வருவதன் மூலம் மனித உயிர்கள், சொத்துக்கள் மற்றும் மக்கள் வாழ்வை பாதுகாத்தல்.

நோக்கம்	சுட்டிகள்	இலக்கு (2021)	இதுவரையில் வெற்றி பெறுவதிலான முன்னேற்றம்		
			100%-90%	75%-89%	50%-74%
வினைத்திறன்மிக்க அனர்த்த நிவாரணசேவைகள்	அனர்த்தம் ஏற்பட்டு குறைந்த காலப்பகுதியில் பதிலிருத்தல்	1 மணித்தியாலத்தினுள்		√	
	நிவாரண சேவைகளுக்கு நிதியை விடுவித்தல்	12 மணித்தியாலத்தினுள்		√	
	நிதி வழங்கல்	ரூ. 150 மில்			√
அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்கல்	நஷ்டஈட வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை	26401		√	
பாதிக்கப்படக்கூடிய மக்களை பாதுகாப்பாக தங்கவைத்தல் மற்றும் அவர்களுது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்தல்.	பாதுகாப்பு நிலையங்களின் எண்ணிக்கை	60	√		
மண்சரிவு மற்றும் உயர் மண்சரிவு அபாயம் காரணமாக தமது வசிப்பிடங்களிலிருந்து அகற்றப்படும் குடும்பங்களை மீள்குடியமர்துதல்.	நிர்மாணப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை	250			√

அனர்த்தத்துக்குப் பின்னரான முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்.

1.1. வினைத்திறன்மிக்க அனர்த்த நிவாரண சேவைகள் மூலம் தகைமையுடைய பயனாளிக்கு அனர்த்த நிவாரண சேவையை வழங்குதல்.

1.2. அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள வீடுகளுக்கு நஷ்டஈட வழங்குதல்.

1.3. அனர்த்தங்களுக்குப் பின்னரான முகாமைத்துவ செயற்பாடுகள் குறித்து அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களை அறிவுறுத்துதல்.

1.4. பாதுகாப்பான நிலையங்களை தாபித்தல்.

1.5. மண்சரிவு மற்றும் மண்சரிவு அபாயம் காரணமாக தமது வசிப்பிடங்களிலிருந்து அகற்றப்படும் குடும்பங்களை மீள்குடியமர்த்துதல்.

5. நிலைபேறான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான செயல்திறன் (SDG)

5.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) பூர்த்தி செய்வதிலான செயலாற்றுகை

5.1.1. அடையாளம் காணப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை குறிப்பிடுக.

இலக்குகள் / நோக்கங்கள்	இலக்குகள்	வெற்றிச் சுட்டிகள்	இதுவரையில் வெற்றிகளைப் பெறுவதிலான முன்னேற்றம்		
			0%-49%	50%-74%	75%-100%
1. நேரடியாக தொடர்புடைய இலக்குகள்	எங்கும் எல்லாவிடத்திலும் காணப்படும் வறுமையை மட்டுப்படுத்துதல் .	• தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதி காப்பீட்டை நடைமுறைப்படுத்துதல். (முழுமையான அரசாங்க அணுரணை)			√
		• செந்தாய் செயலாற்றுகை சட்டகத்தின் கருமமாற்றல் முறைமையின் A மற்றும் B இலக்குகளுக்கான அடிப்படை தரவுகளை பூர்த்தி செய்தல் (2000 முதல் 2019 வரை)			√
		• பொதுமக்கள் உள்ளிட்ட சகல தரப்பினரையும் அறிவுறுத்துதல், பயிற்றுவித்தல் மற்றும் முன்ஆய்த் திட்டங்களை தயார் செய்தல்.		√	
		• அனர்த்த அபாய தணிப்ப கருத்திட்டங்களை மாவட்டரீதியில் நடைமுறைப்படுத்துதல்.		√	
		• கட்டிடங்களை மதிப்பீடு செய்தலும் தரப்பரிசோதனைக்கானசெயன்முறைகளை விருத்தி செய்தலும்.	√		
		• மண்சரிவுகளை பகுப்பாய்வு செய்தல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி.			√
		• மண்ரிவு அபாய மதிப்பீட்டு சான்றிதழை வழங்குதல்.			√
11. நகர மற்றும் குடியிருப்புக்களின் எண்ணிக்கை, பாதுகாப்பு, உறுதிப்படுத்தல் மற்றும் நிலைபேறாக்கல		• தேசிய அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயார் செய்தல் (2018-2030)		√	
		• அனர்த்த முகாமைத்துவ சட்டத்தை திருத்துதல்.		√	
		• அனர்த்த மீள்எழுச்சி வீடுகளை அமைத்தல் தொடர்பிலான கட்டமைப்பு மற்றும் ஆலோனைகளைத் தயார் செய்தல்.		√	
		• அபாயமுன்னறிவித்தல் முறைமையிலான குறைபாடுகளை அடையாளம் கண்டு 24 மணித்தியாலம் x 7 (24x7) செயற்படும் மண்ரிவுமுன்னறிவித்தல்நிலையமொன்றைத் தாபித்தல்.			√
		• தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பின் ஊடாக 350 அனர்த்த முகாமைத்துவ குழுக்களை தாபித்தல்.			√
		• துறைகளுக்கானஅனர்த்த முகாமைத்துவ வழிகாட்டல்களைத் தயார் செய்தல்.	√		
		• அனர்த்த அபாய மதிப்பீட்டு செயன்முறைகளை தயார் செய்தல்.			√
		• வர்ஷோ (Warsaw) சர்வதேச சமவாயத்துக்கு ஏற்ப இசைந்தொழுகி, நட்ட மற்றும் தேச செயன்முறையை தயார் செய்தல்.	√		
		• மண்சரிவுகள் குறித்து ஆய்வு செய்தலும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திகளை மேற்கொள்ளுதலும்(மண்சரிவு இடர்களை வரைபடமாக்கும் இடைவெளியை நிரப்புதலும் காணப்படும் 1:1,0000 அளவிலான மண்ரிவு இடர் வரைபடங்களை இற்றைப்படுத்துதலும்)		√	
		• காற்றோட்டத்தை மதிப்பீடு செய்தலும் நகர வீடுகளின் காற்றோட்டத்தின் தரத்தை மேம்படுத்துவதற்காக வீட்டுத் தாவரங்களைப் பயன்படுத்துதல்.	√		
		• இலங்கையில் நகரப் புறங்களில் நடப்புசார் வளித்தர மேற்பார்வை வலையமைப்பினை அபிவிருத்தி செய்தல்.	√		
		• செந்தாய் சட்ட சமவாயத்தின் தேசிய இலக்ககள் மற்றும் இதன் பொறுப்புகள் குறித்த உரிய பங்காளி நிறுவனங்களை அறிவுறுத்துதல்9 2021ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டு நிதி ஏற்பாட்டின் மீது முன்னெடுக்கப்படுகின்றது).	√		
13. காலநிலை		• அனர்த்தங்களுக்குப் பின்னர் வழமை நிலைக்கு			

மாற்றங்கள் மற்றும் இதன் தாக்கங்களுக்கு எதிராக துரிதமாக செயற்படு		திரும்பும் கொள்கையினை (Recovery Policy) தயார் செய்தலும் குறிப்பிட் கொள்கையினை அனர்த்த முகாமைத்துவ கொள்கை தொகுதியில் உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ளுதலும்.	√		
		• அனர்த்தங்களுக்குப் பின்னர் வழமை நிலைக்கு திரும்பும் திட்டத்தை (Recovery Plan) பூர்த்தி செய்தல்.	√		
		• 021-2030 காலகட்டத்துக்காக தேசியரீதியில் உருவாக்கப்பட்டுள்ள 5 பங்களிப்புகள் (NDCs) அடையாளம் காணப்பட்டுள்ளன.			√
		• இதன் கீழ், சேதம் மற்றும் நட்டங்களை குறைப்பதற்காக 2000-2015 வரையில் இடம்பெற்றுள்ள 64 எல்லை காலநிலை மாற்றங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.			√
		• தேசம் மற்றும் நட்ட துறை சார்ந்ததாக 2021-2030 காலகட்டத்துக்கான தேசியரீதியில் தீர்மானிக்கப்பட்டுள்ள 05 பங்களிப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் செயலாற்றுகைத் திடமும் தயார் செய்யப்படுகின்றது.			√
		• இலங்கையின் பல்இடர் அபாய தோற்றப்பாட்டை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் (Risk Profile Development Project) 10 நகரங்களை அடையாளம் கண்டு மாவட்ட மட்டத்தில் அபாய தோற்றப்பாட்டுக்கான தரவுகளை சேகரிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டள்ளன. இதற்கான அடிப்பை வரைபுகள் மேம்படுத்தப்படுகின்றன.			√
